# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 02 வியாழக்கிழமை (18-07-2002 UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:235


# வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதி?

கொழும்பு,ஜூலை18

**பலாலி விமான நிலையத்தின் எல்லையில் இருந்து அரை மைல் தூரத்தை மட்டும் பாதுகாப்பு வலயமாகப் பேணி, எஞ்சிய பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிப்பது என்று அரசு உயர்மட்டம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் பங்குபற்றிய சந்திப்பு ஒன்றில் இதுபற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வலி.வடக்கில் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில் பலாலி விமான நிலையத்தைச் சூழவுள்ள எல்லைகளில் இருந்து அரைமைல் தூரத்தை மட்டும் பாதுகாப்பு வலயமாகத் தொடர்ந்து பேணுவது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது என்றும் -

எஞ்சியுள்ள பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என்றும் -

அந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதாக அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

குப்பிளான், கட்டுவன், வசாவிளான், தெல்லிப்பழை, கீரிமலை, சேந்தாங்குளம், அச்சுவேலிப் பகுதிகளிலேயே மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் கூறினார்.

மக்களை மீளக்குடியமர அனுமதிக்கும் பிரதேசங்கள் தொடர்பான வரைபடம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். வரும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் இதுபற்றி நேரில் ஆராய உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(ம-3)

## புலிகளின் கோரிக்கைக்கு இடமளிப்பதில் அரசு ஆர்வம்

# யுத்தநிறுத்த உடன்பாட்டை சீரமைக்க மீண்டும் பேச்சு!

### முச்சந்தி முரளி



சொல்லுற வேகம் செய்கிறதிலையும் இருக்கும் என்று சொல்லுறியளோ...

## சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி

கொழும்பு,ஜூலை18

**"விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரவு மற்றும் நடமாட்டம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக, யுத்தநிறுத்த உடன்பாட்டை மறுசீரமைக்க அரசு தயார். இதற்காக மீண்டும் பேச்சு நடத்தப்பட வேண்டும்"**

**- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார்.**

புலிகளின் கடற்போக்குவரத்துத் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெளிவான - திட்டவட்டமான - ஏற்பாடுகள் இடம்பெறாத நிலையில் -

தமது கட்டுப்பாட்டில் உள்ள கடற்பிரதேசத்தில் - தங்களின் சுதந்திரமான கடற்போக்குவரத்துக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் - கடற்படை தலையிடக்கூடாது; தலையிட முடியாது என்று புலிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

இந்த விவகாரம் குறித்து அரசுத் தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கருத்து வேறுபாடு - இணக்கமான முடிவு ஏதும் எட்டப்படாத நிலையில் கடந்த இரண்டு மாத காலங்களாக இழுபறி நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

கடற்புலிகளின் 10ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில்

## தலைவர் பிரபாவுக்கு செங்கம்பள வரவேற்பு

கிளிநொச்சி,ஜூலை18

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் படையணி ஆரம்பிக்கப்பட்டு 10ஆவது ஆண்டு நிறைவடைந்ததையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்து கொண்டு செங்கம்பள வரவேற்பையும், கடற்புலிகளின் சிறப்புப் படையணியின் அணிவகுப்பையும் ஏற்றுக் கொண்டார். நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவு திறந்த வெளியரங்கில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் நின்று தலைவர் பிரபா இந்தக் கௌரவத்தைப் பெற்றார்.

விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பீடத்துக்கு தலைவர் பிரபாகரனை கடற்புலிகளின் தளபதி கேணல்

(12 ஆம் பக்கம் பார்க்க)



மேள தாளத்துடன் புலிகள் அழைத்து வரப்படும் காட்சி.

## காரைநகரில் புலிகளுக்கு மேளதாளத்துடன் வரவேற்பு

காரைநகர்,ஜூலை18

காரைநகருக்கு நேற்றுப் பிற்பகல் வருகைதந்த விடுதலைப் புலிப் போராளிகளுக்கு மக்கள் உணர்வு பூர்வமான வரவேற்பு அளித்தனர்.

காரைநகர் அரசியல் பொறுப்பாளர் மாதுளன் தலைமையில் வருகைதந்த 20 போராளிகளும் வலந்தலைச் சந்தியில் இருந்து யாழ்ரன் கல்லூரி வரையான 3 மைல் தூரத்துக்கு மேள தாளங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வீதி எங்கும் மக்கள் பூரண கும்பம் வைத்து ஆராத்தி எடுத்து உணர்வுபூர்வமாக வரவேற்பு அளித்தனர்.

எங்கும் மஞ்சள், சிவப்புக் கொடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஒப்பந்தத்தை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு

# ஐரோப்பிய ஒன்றியம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

கிளிநொச்சி,ஜூலை18

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விடயங்களை விரைவாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

நேற்றுத் தம்மைச் சந்தித்துப் பேசிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் விடுதலைப் புலிகள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் ஆறு நாடுகளின் தூதரக உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்தது.

இந்தக் குழு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் பேச்சுகளை நடத்தியது.

இத்தாலி நாட்டுத்தூதர் சபிட்டோர் ஹேறாட்டன், ஜேர்மன் நாட்டுத் தூதர் ஜஸ்வின் எலிபாஸ், பிரான்ஸ் நாட்டுத் தூதர் திருமதி மேரி பிரான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் 9பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். சிறைச்சாலையில் கடந்த இரு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒன்பது இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யும்படி சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் யாழ். நீதிமன்றத்துக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து பிரஸ்தாப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தீவக தாக்குதல் சம்பவம்; செம்மணன் சாட்சியம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

வேலணைத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திவரும் சுயாதீன ஆணைக்குழு முன் தாக்குதலுக்கு இலக்கான விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் நேற்று வாக்குமூலம் அளித்தார்.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற இந்த விசாரணைகளில் யாழ். படைகளின் தளபதி மேஜர்ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் பொதுமக்கள் தரப்பில் வல்லிபுரம் செல்வானந்தன், திருமதி விக்கினேஸ்வரி செல்வானந்தன், விஸ்வலிங்கம் செல்வம், திருமதி ஆனந்த தவராசா அமிர்தகௌரி ஆகியோர் சாட்சியமளித்தனர்.(ம-10)

# விளையாட்டு

## வடக்கு-கிழக்கு மாகாண போட்டிகளின் முடிவுகள்

திருகோணமலை,ஜூலை18

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் கடந்த வாரம் நடைபெற்றன.

9கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த 296 குழுக்கள் பங்குபற்றிய பல்வேறு விளையாட்டுக்களில் 55 குழுக்கள் அகில இலங்கை ரீதியில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளன.

136 மெய்வன்மை நிகழ்ச்சிகளில் 1,283 மாணவர்கள் பங்குபற்றினர். இதில் 544 மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் சம்பியனாகிய போட்டியாளர்கள் விவரம் வருமாறு:-

கனிஷ்ட பிரிவில் மாவட்ட அணிகள் பெற்ற புள்ளிகள்:

திருகோணமலை-83, கல்முனை-31, அம்பாறை-24, மட்டக்களப்பு-15, யாழ்ப்பாணம்-14, மன்னார்-01, முல்லைத்தீவு-01, வவுனியா-01.

சிரேஷ்ட பிரிவில் மாவட்ட அணிகள் பெற்ற புள்ளிகள் :

திருகோணமலை-308,அம்பாறை-194, யாழ்ப்பாணம்-157, மன்னார்-105, மட்டக்களப்பு-78, கல்முனை-67, முல்லைத்தீவு-52, வவுனியா-50, கிளிநொச்சி-38. (ம)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்: பரபரப்பாக டிக்கெட் விற்பனை

லண்டன்,ஜூலை18

அடுத்தவருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான டிக்கெட்டுகள் பரபரப்பாக விற்பனையாகியுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி 9 முதல் மார்ச் 23 ஆம் திகதிவரை தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, கென்யா ஆகிய நாடுகளில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான முதற்கட்ட டிக்கெட் விற்பனை கடந்த திங்களன்று ஆரம்பமானது.

குறித்த மைதானத்தில் நடைபெறவுள்ள சகல போட்டிகளுக்குமான டிக்கெட்டுகள் (மைதான பொதி) ஆரம்பச் சுற்றில் குறிப்பிட்ட அணி பங்குபற்றும் சகல போட்டிகளுக்குமான டிக்கெட்டுகள் (அணிகளைப் பின்தொடரும் பொதி) ஆகிய இரு பிரிவுகளில் முதற்கட்ட டிக்கெட் விற்பனை நடைபெறுகிறது.

உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் உள்ள டிக்கெட் விற்பனை நிலையங்களில் நேரடியாகவும், இச்சுற்றுப்போட்டிக்கான இணையத்தளம் மூலமாகவும் டிக்கெட் விற்பனை நடைபெறுகிறது.

கடந்த திங்களன்று அதிகாலையிலேயே ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தென்னாபிரிக்காவின் கேப்டவுன், ஜொஹன்னஸ்பேர்க் நகரிலுள்ள டிக்கெட் விற்பனை நிலையத்தின் முன்பாகக் குவியத்தொடங்கினர்.

222,000 டிக்கெட்டுகள் முதற்கட்ட விற்பனைக்கு விடப்பட்டன. இவற்றுள் 2 நாள்களுக்குள் 1,29,000 டிக்கெட்டுகள் விற்பனையாகிவிட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டி நடைபெறவுள்ள ஜொஹன்னஸ்பேர்க், வொண்டர் அரங்கு, கேப்டவுனின் நியூலேண்ட், டர்பன் நகரின் கிங்ஸ்மீட் அரங்கு ஆகியவற்றிற்கான முதற்கட்ட டிக்கெட்டுகள் முற்றாக விற்றுத் தீர்ந்தன.

செஞ்சூரியன், போர்ட் எலிஸபெத், புளூம் பொன்ரேன் நகரங்களிலுள்ள மைதானங்களுக்குரிய சொற்ப எண்ணிக்கையான டிக்கெட்டுகள் மாத்திரம் எஞ்சியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அணிகளைப் பின்தொடரும் 'டிக்கெட் பொதியில்' இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய அணிகள் தொடர்பானவை விற்று முடிந்துள்ளன.

**இணையத்தளத்தில் கோளாறு**

டிக்கெட் விற்பனையின் ஆரம்ப நாளான திங்களன்று இணையத்தளம் மூலமான டிக்கெட் விற்பனை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையானோர் இணையத்தளத்தை முற்றுகையிட்டதன் காரணமாக இணையத்தளத்தின் இயக்கத்தில் தடை ஏற்பட்டது. இதனால் முதலாவது நாளன்று 30,500 டிக்கெட்டுகளே விற்பனையாகியதென அறிவிக்கப்படுகிறது. (ம)

## இந்தியா மீது டெரன் கோவ் குற்றச்சாட்டு

லண்டன்,ஜூலை18

இங்கிலாந்தில் நடைபெற்ற முக்கோண கிரிக்கெற் தொடரின் இறுதிப்போட்டியில் துடுப்பெடுத்தாடிய போது இந்திய வீரர்கள் பந்தை மாற்றுமாறு கோரினர்.

வெள்ளை நிறப்பந்தில் புற்களின் கறை படிந்திருப்பதால் பந்தைப் பார்க்க முடியவில்லை என்பதே இதற்குக் காரணம்.

இந்திய வீரர்களின் இச்செய்கையை இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டெரன்கொவ் குறை கூறியுள்ளார்.

"பந்து வீச்சாளர்களை சிரமத்துக்குள்ளாக்கி, அதன் மூலம் நன்மை அடையும் தந்திரம் இது. முதல் 15 ஓவர்களில் மென்மையான பந்தின் மூலம் 'ரிவர்ஸ் ஸ்விங்' முறையில் பந்து வீசமுயன்றோம் அப்போது எமக்குச் சாதகமாகவே நிலைமை இருந்தது.

திடீரென வன்மையான பந்தொன்றை வழங்கினார்கள். இப்பந்தின் மூலம் இலகுவாக பௌண்டரிகளை அடிக்க முடிந்தன.

- இவ்வாறு டெரன் கொவ் கூறினார்.

"பந்தைப் பார்க்க முடியவில்லை என துடுப்பாட்ட வீரர்கள் கூறுவதால் வெள்ளைப் பந்தை மாற்றும் பிரச்சினை அடிக்கடி ஏற்படுகின்றது.

இந்தியா மட்டுமல்ல பல நாடுகளும் இதைச் செய்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும், அல்லாவிடின் உலகக்கிண்ணப் போட்டிகளிலும் சிக்கல் ஏற்படலாம்."

- இவ்வாறு அவர் மேலும் சொன்னார். (ம)

## 'எல்.பி.டபிள்யூ' ஆட்டமிழப்பிற்கு 3ஆவது நடுவரின் ஆலோசனை

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் கள நடுவர்கள் எல்.பி.டபிள்யூ குறித்துத் தீர்மானிக்கும் முன்னர் மூன்றாவது நடுவரின் ஆலோசனையைக் கோரலாம்.

- இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் செவ்வாயன்று அறிவித்தது.

ஐ.சி.சியின் கிரிக்கெட் பொது முகாமையாளர் டேங் ரிச்சட்ஸன் இது தொடர்பாகக் கூறுகையில் :-

"ஆடுகளத்தில் லெக் ஸ்டம்பிற்கு உட்புறமாகவா, வெளியிலா பந்து விழுந்தது என்பது நிச்சயமில்லாதிருந்தால் மாத்திரம் அது குறித்து மூன்றாவது நடுவரின் ஆலோசனையைக் கோரலாம்.

பந்து ஸ்டம்பைத் தாக்கியிருக்குமா என்று கணிப்பதற்கு மூன்றாவது நடுவரின் தீர்ப்பைக் கோர வேண்டியதில்லை. கள நடுவர்களே இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வர்.

செப்ரெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சிசாம்பியன் ஷிப் போட்டிகளில் இத்திட்டம் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படும்.

எல்.பி.டபிள்யூ விடயத்தில் நடுவர்கள் மீண்டும் தவறிழைக்கின்றனர்.

- இவ்வாறு டேங் ரிச்சட்ஸன் கூறினார். இவர் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சமாதானத்தை எட்டுவதற்கு தேசிய கருத்துப் பரிமாற்றம்

## ஜனாதிபதி சந்திரிகா யோசனை

நிலைத்து நிற்கும் சமாதானத்தை அடையும் குறிக்கோளுடன் தேசிய கருத்துப் பரிமாற்றம் ஒன்றை ஏற்படுத்த தான் எண்ணியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்.

குருநாகல், அம்பன்பொல மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற படையினர் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றுகையிலேயே இதனைக் கூறினார்.

ஜனாதிபதி தொடர்ந்து கூறுயதாவது:-

இக்கருத்துப் பரிமாற்றம்மூலம் பெறப்படும் கருத்துக்களை ஒன்று திரட்டி அறிக்கையாக அரசிடம் சமர்ப்பிக்க எண்ணியிருக்கிறேன். மகா சங்கத்தினர், புத்தி ஜீவிகள், ஆசிரியர்கள், விவசாயிகள் உட்பட சமூகத்தின் சகல தரப்பினரும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அனைத்தையும் நான் செய்திருக்கிறேன். அரசமைப்புச் சட்டத்தில் எனக்கு வழங்கப்பட்ட சகல அதிகாரங்களையும் அரசுக்கு வழங்கியிருக்கிறேன், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவே அதைச் செய்தேன்.

ஆனால், இன்னமும் நாட்டில் சமாதானம் ஏற்படவில்லை. எதிர்காலத்தில் சமாதானம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

# முஸ்லிம் தலைமைத்துவத்தை காட்டிக்கொடுக்கும் செயல்

## பேரியல் கூற்றுக்கு கிழக்கு அமைப்புக்கள் கண்டனம்

கிழக்கு முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்க அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசைக் கோரியுள்ளாரென நாடாளுமன்ற உறுப்பினர் பேரியல் அஷ்ரஃப் தெரிவித்திருப்பது முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவத்தை அந்நியர்களிடம் காட்டிக் கொடுக்கும் செயலாகும். அதே வேளை வேண்டுமென்றே முஸ்லிம் இளைஞர்களை தீவிரவாதிகளாகச் சித்திரிக்க எடுக்கும் நடவடிக்கையுமாகும்.

- இவ்வாறு கிழக்கு முஸ்லிம் அமைப்புக்கள் வன்மையாகக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

சிங்களப் பேரினவாதிகளிடையே ஒளிந்து இருக்கும் பேரியல் போன்றவர்கள் சமூகத்தைப் பற்றியும், வடக்கு, கிழக்கின் இன்றைய சூழ்நிலை பற்றியும் கிஞ்சித்தும் அறியவில்லை. கேடுகெட்ட அரசியலை மாத்திரம் இலக்காக வைத்து இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் கருத்துத் தெரிவிப்பது எரியும் நெருப்பில் எண்ணெயைக் கொட்டுவதற்கு ஒப்பானதாகும்.

கிழக்கு முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்தக்கூடாது என்பதற்காகவே மர்ஹூம் அஷ்ரஃப் முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்தார். அத்தகைய ஒருவரின் துணைவியார் இவ்வாறு பயணிப்பது அவரது சொந்த சிந்தனையல்ல. பேரினவாதிகளின் கூட்டுமொத்தக் கருத்தாகும் என்று இந்த அமைப்புக்கள் தெரிவித்தன. (ஒ)

# சர்வோதயத்தில் நிதிநெருக்கடி; உதவித்திட்டங்கள் முடக்கம்

## பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

எமது அமைப்பிடம் போதியளவு நிதி கையிருப்பில் இல்லாத காரணத்தால் எம்மால் 95ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொண்டது போன்றே வேலைத்திட்டங்களைத் தற்போது செய்யமுடியாதுள்ளதாக இலங்கை சர்வோதய அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வின்னியா ஆரியரத்தின தெரிவித்தார்.

குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட அவர், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

தற்போது மீளக்குடியேறிவருபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். சர்வோதய அமைப்பிடம் போதிய நிதி இன்மையாலும்-

வெளிநாட்டு நிறுவனங்களும் முன்புபோல் தேவையான அளவு நிதி உதவி வழங்காமையாலும் -

எமது செயற்றிட்டங்களை பெரியளவில் மேற்கொள்ள முடியாதுள்ளது. இருந்தபோதும் மக்களை முன்னேற்ற வேண்டிய கடப்பாடு எமக்கு இருப்பதால் எம்மிடமுள்ள குறைந்த வளங்களைக் கொண்டே நீண்டகால அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. - என்றார்.

தெற்கில் சர்வோதய இயக்கம் கிராமிய வங்கிபோன்ற ஒன்றை ஆரம்பித்து பல்வேறு உதவித்திட்டங்களை மக்களுக்கு வழங்கிவருவதாகவும் -

அதேபோன்றதொரு நடவடிக்கையை யாழ்ப்பாணத்திலும் ஏற்படுத்த முயற்சித்த வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

'தென்பகுதி மக்கள் சமாதானத்தை முற்றுமுழுதாக விரும்புகின்றனர். யுத்த நிறுத்த காலப்பகுதியில் சமூக அபிவிருத்தி ஏற்படுத்த வேண்டும் என்பதை அனைத்து மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தென்னிலங்கை இனவாதக் கட்சிகளின் செல்வாக்கு இனிமேல் பயனளிக்கப் போவதில்லை.'

- இவ்வாறு ஆரியரத்தின மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)

# நெடுந்தீவில் நாளை இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் இலவச மருத்துவமுகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

மேற்படி மருத்துவ முகாமை நடாத்துவதற்கென அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் தலைமையில் 34 வைத்திய நிபுணர்கள் உட்பட 60 பேர் கொண்ட மருத்துவக்குழுவினர் இன்று தரைவழிப் பாதையூடாக யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம்செய்யும் இந்தக் குழுவினர், காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ முகாமை நடத்துவர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மிகப்பெரிய அளவில் நடைபெறும் மேற்படி மருத்துவ முகாமில் பொது மக்கள் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுமென நெடுந்தீவு உதவி அரசாங்கஅதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கேட்டுள்ளார். (எ-10-139)

# முக்கிய சந்திப்புகள்!

வலிகாமம் கல்விவலய கோப்பாய் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கான மிக முக்கிய சந்திப்பு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கல்விக்கோட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையின் மாணவத் தலைவர்களை இச்சந்திப்புக்கு அனுப்பிவைக்குமாறு வலி.கிழக்கு கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி செயலணி உத்தியோகத்தர்களுக்கான முக்கிய சந்திப்பு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ ★ ★

மினிபஸ் உரிமையாளர்களுக்கான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி பருத்தித்துறை மினிபஸ் அலுவலகத்தில், காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சிக் கோட்ட அரசியல் பிரிவினர் கேட்டுள்ளனர்.

★ ★ ★

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி செயலணி உத்தியோகத்தர்களுக்கான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து கிராமசேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்குமான முக்கிய சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகலரையும் கலந்துகொள்ளுமாறு வலி.கிழக்கு அரசியல் பிரிவினர் கேட்டுள்ளனர். (ம)

# பளையில் 508 குடும்பங்கள் இதுவரை மீளக்குடியமர்வு

தென்மராட்சி,ஜூலை18

பளைப்பிரதேசத்தில் கடந்த 15ஆம் திகதிவரை 508 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 750 பேர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளதாக பளைப் பிரதேச செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மக்களுக்கு பளையில் வைத்து நிவாரண உலர் உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து பளை நகரப் பகுதி மீண்டும் வழமைக்குத் திரும்பி வருகிறது 25இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

சந்தைக் கட்டடங்கள் தரைமட்டமாக உள்ள போதிலும் மரக்கறி, மீன் வியாபாரிகள் மர நிழலில் தமது அன்றாட வியாபாரத்தை மேற்கொண்டு வருவதைக் காணமுடிகிறது.

சேதமடைந்த வர்த்தக நிலையங்களை திருத்தும் நடவடிக்கையில் வர்த்தகர்கள் ஈடுபட்டுவருவதையும் காணமுடிகிறது. (ம-117)

# வைகோ கைது செய்யப்பட்டது சரியா?
# ஆராயுமாறு தமிழக அரசுக்கு ஆணை!
## மத்திய அரசு பிறப்பித்தது

சென்னை,ஜுலை18

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யும் முறை சரியா என்பதை ஆராய்வதற்கு உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான ஆய்வுக்குழு ஒன்றை அமைக்குமாறு தமிழக அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆய்வுக்குழு ஏற்கனவே தமிழக அரசால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதைச் செய்யுமுன் வைகோ கைது செய்யப்பட்டது ஏன் என்றும் மத்திய அரசு வினா எழுப்பியிருக்கிறது.

'பொடா'வின் கீழ் கைது செய்பவர்களை விசாரிக்க தனி நீதிமன்றமும், கைது சரியா, தவறா என்பதை ஆராய தனி ஆய்வுக் குழுவும் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு மாநில அரசுகளுக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. இந்த நடைமுறையை



இதுவரை பின்பற்றாமல், தமிழக அரசு வைகோவை கைதுசெய்துவிட்டது.

ஆய்வுக் குழு அமைத்துவிட்டு அது குறித்த அறிவிப்பை 'கசட்டில்' வெளியிடுமாறும் மத்திய அரசு தமிழக அரசக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தமிழக செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை - நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் - சபாநாயகரின அனுமதியுடன் - வைகோ கைதைக் கண்டித்து பல எம்.பிக்கள் உரையாற்றினர்.

சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயன் சிங் யாதவ், வைகோ கைது விவகாரத்தை முதலில் அவையில் எழுப்பியபோது, சபாநாயகர் அதற்கு அனுமதியளிக்கவில்லை.

ஆனால், கேள்வி நேரத்தின் பின் அதற்கு அனுமதியளித்தார். (ஒ)

# மேற்குக்கரையில் குண்டுவெடிப்பு; எட்டு இஸ்ரேலியர் உயிரிழந்தனர்!

லண்டன்,ஜுலை18

மேற்குக்கரையின் யூதக் குடியிருப்பு ஒன்றின் அருகே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 8 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

யூதர்கள் வசிக்கும் 'இம்மானுவல்' குடியிருப்பு அருகேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யூதக் குடியிருப்பின் அருகே பஸ தரிப்பிடத்தில் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் -

தரிப்பிடத்தில் பஸ் ஒன்று வந்து நின்ற சமயத்தில் அப்பகுதியில் மறைந்திருந்த 3 பலஸ்தீனர்கள் குண்டை வெடிக்கச் செய்துவிட்டு ஓடித்தப்பியதாகவும் -

நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

மேற்குக்கரையில பலஸ்தீன நகரங்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் ஆக்கிரமித்த பின்னர் இடம்பெற்ற பலஸ்தீனத் தாக்குதல்களில் தற்போதைய குண்டுவெடிப்பு குறிப்பிடத்தக்க சம்பவம் என்று கூறப்படுகிறது.

'இமானுவல்' யூதக் குடியிருப்புக்கு இஸ்ரேலிய இராணுவத்தினர் பாரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். குண்டுவெடிப்பு இடம்பெற்ற பஸ்தரிப்பிடம் அருகேயும் இஸ்ரேலியப் படையினர் நிலை கொண்டிருந்தனர். இத்தகைய நிலையில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது ஒருபுறமிருக்க,

மேற்படி குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு காரணமான பலஸ்தீனர்களில் ஒருவரை தாம் சுட்டுக்கொன்று விட்டதாக இஸ்ரேலியப் படையினர் நேற்றுத் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றவுடன் அப்பகுதியை இஸ்ரேலியப் படையினர் சுற்றி வளைத்ததாகவும் -

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளின் போது, மறைந்திருந்த பலஸ்தீனத் தீவிரவாதிகளுடன் துப்பாக்கிச் சண்டை மூண்டதாகவும் - அந்தச் சமரிலேயே பலஸ்தீனத் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் -

இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது. (ஒ)



மேற்குக்கரையில் தாக்குதலுக்குள்ளான பஸ்ஸை இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

# நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனுக்கு ரூபா 40 கோடி!
## நீதிமன்றத்தில் அரசு தரப்பு தகவல்

ஈரோடு,ஜுலை18

கன்னட நடிகர் ராஜகுமாரை விடுவிக்க வீரப்பனுக்கு 40 கோடி இந்திய ரூபா வழங்கப்பட்டதாக ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் அரசின் சிறப்பு சட்டத்தரணி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நடிகர் ராஜ்குமார் கடத்தல் வழக்கில் கைதுசெய்யப்பட்ட 'நக்கீரன்' செய்தியாளர் சிவசுப்பிரமணியனை பிணையில் விடவேண்டும் என்று அவரது சட்டத்தரணி பா.ப.மோகன் நீதிமன்றத்தில் இரண்டாவது முறையாக மனுச்செய்துள்ளார்.

ஈரோடு மாவட்ட முதன்மை அமர்வு நீதிவான் தமிழ்வாணன் முன்னிலையில் இந்த மனுமீதான விவாதம் நடைபெற்றது.

விவாதத்தின் போது சட்டத்தரணி மோகன் கூறியதாவது:-

கடந்த 7 மாதங்களாக சிவசுப்பிரமணியன் சிறையில் உள்ளார். வழக்குத் தொடர்பாக இவரைப் பொலீஸார் விசாரித்து உள்ளனர். நக்கீரன் ஆசிரியரையும் பொலீஸார் 10 நாள்கள் விசாரித்துள்ளனர்.

ஆனால், இதுவரை ஆதாரமாக எவ்விதக் குற்றச்சாட்டையும் அரசுத் தரப்பு தாக்கல் செய்யவில்லை. எனவே,

உலக அரங்கில்

சிவசுப்பிரமணியனை பிணையில் விட வேண்டும்' என்றார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசின் சிறப்பு வழக்கறிஞர் சங்கரநாரயணன் கூறியதாவது:-

நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க ரூ.40 கோடி கைமாறியுள்ளது. இதில், ரூ.10 கோடி ராஜ்குமார் மகன்கள் மூலம் நக்கீரன் ஆசிரியர் கோபாலுக்குக் கொடுக்கப்பட்டு வீரப்பனைச் சென்றடைந்துள்ளது.

இதில் செய்தியாளர் சுப்பிரமணியனுக்கு தொடர்பு உண்டு. எனவே, அவரக்கு பிணை வழங்கக் கூடாது' என்றார். (ஒ)

# தமிழ் இணைய மாநாடு அமெரிக்காவில் நடக்கும்

சென்னை,ஜுலை17

உலகத் தமிழ் இணைய மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறவுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் பொஸ்டன் நகரில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

தமிழ் இணைய மாநாடு வரிசையில் இது ஐந்தாவது மாநாடு ஆகும்.

உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் அமெரிக்கக் கிளை, அமெரிக்காவில் உள்ள பெர்க்ளியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தெற்காசிய கல்வி மையம் ஆகியவை இணைந்து இம்மாநாட்டை நடத்துகின்றன.

'தகவல் தொழில் நுட்பப் பாலம்' என்ற தலைப்பில் நடைபெறும் இம்மாநாட்டில், தொழில்நுட்ப கருத்தரங்கு, கண்காட்சி ஆகியவை நடைபெறுகின்றன. (ஒ)

# வைகோ கைதை எதிர்த்து விரைவில் வழக்கு தாக்கல்
## மத்திய அமைச்சர் தகவல்

சென்னை,ஜுலை18

'பொடா' சட்டத்தின் கீழ் வைகோ கைது செய்யப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடரப்போவதாக ம.தி.மு.க.தலைவர்களில் ஒருவரும் மத்திய அமைசசருமான செஞ்சிராமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

'இச் சட்டத்தை நாங்கள் இன்னமும் ஆதரிக்கிறோம். ஆனால் இதைத் தவறாகப் பயன்படுத்தியதை எதிர்த்து வழக்கு தொடருவோம். வழக்கு உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில் தொடரப்படும்.

வைகோ கைது விடயத்தில் தலையிடுமாறு மத்திய அரசை ம.தி.மு.க. வலியுறுத்தவில்லை.

மாநில அரசிடம் இருந்து ம.தி.மு.கவை தடைசெய்ய கோரிக்கை வந்தால் அதைப் பரிசீலிப்பதாக துணைப் பிரதமா எல்.கே.அத்வானி கூறியதாக வெளியான செய்தி தவறானது.

"மாநில அரசின் கோரிக்கை வரும் போது யோசிக்கலாம்" என்றுதான் அத்வானி கூறினார். - என்றார்.

# விமானி இல்லாது ஓடிய விமானம்; அதிலிருந்த 3 குழந்தைகள் தப்பின!
## ஆஸ்திரேலியாவில் சம்பவம்

சிட்னி,ஜுலை18

ஆஸ்திரேலியாவில் விமானி இல்லாமல் ஓடிய விமானத்தில் இருந்த 3 குழந்தைகள் தெய்வாதீனமாக உயிர்தப்பின.

ஓர் இயந்திரம் உள்ள அந்த சிறிய விமானம் வடக்குப் பகுதியில் உள்ள டார்வீன் நகர விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது. அது மேலே எழும்பாததால் விமான விசிறியை கையால் இயக்குவதற்காக விமானி கீழே இறங்கினார். கருவிகளை இயக்கும்போது அது தானாகவே புறப்பட்டு விமானி இல்லாமலேயே ஓடத்தொடங்கி விட்டது. அதில் 3 குழந்தைகள் மட்டும் இருந்தார்கள்.

விமானம் ஓடு பாதையை விட்டு விலகி தாறுமாறாகச் சென்று அருகில் நின்ற 2 விமானங்களில் முட்டி மோதி நின்றது. மோதிய விமானங்கள் சேதம் அடைந்தன. ஆனால், விமானத்தில் இருந்த குழந்தைகள் காயமின்றி தப்பிவிட்டன.

இந்த சம்பவம் பற்றி விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ)

# தந்தையின் உடலுடன் ஓராண்டு வாழ்ந்தவர்

பேர்லின்,ஜுலை18

தனது தந்தையின் உயிரற்ற உடலை ஒரு வருட காலம் வீட்டில் வைத்துப் பாதுகாத்த ஒருவரை ஜேர்மனியப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

ஜேர்மனின் பேர்லின் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த வீடு தந்தையின் பெயரில் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. தந்தை இறந்ததை வெளியில் தெரிவித்தால் வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருக்கும் என்பதால், அவர் இறந்ததை வெளியில் யாருக்கும் சொல்லாமல் மகன் மறைத்துவிட்டார்.

தந்தையின் சடலத்தை வீட்டின் ஒரு அறையில் மறைத்து வைத்துவிட்டார். இவ்வாறு அந்த உடல் சுமார் ஒரு வருடகாலம் அந்த அறையில் கிடந்துள்ளது.

அண்மையில் அந்த வீட்டுக்குள் இருந்து துர்நாற்றம் வீசியதால் அயலவர்கள் பொலீஸாரிடம் புகார் செய்தனர்.

இதனை அடுத்து பொலீஸார் வீட்டினுள் நுழைந்து சோதனையிட்டனர். அப்போது அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்தையின் சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

சடலத்தின் எலும்புக்கூடுகள் மட்டுமே எஞ்சியிருந்தன. அறையில் குப்பைகள் குவிந்து காணப்பட்டன. பொலீஸார் சடலத்தைக் கைப்பற்றி அதனை அடக்கம் செய்தனர்.

எனினும் மகனைக் கைது செய்யவில்லை. அவர் மதுபானத்துக்கு அடிமையானவர் என்பதாலும் எந்தக் குற்றத்தின் அடிப்படையில் அவரைக் கைது செய்வது என்று தெரியாததாலும் அவரைக் கைது செய்யவில்லை என்று பொலீஸார் கூறுகின்றனர். (ம)

## அமெரிக்கத் தாக்குதலில்
# காயமடைந்த பின்லேடன் குணமடைந்து வருகிறார்!
## அவரது நண்பர் தெரிவித்த தகவல்

லண்டன்,ஜுலை18

கடந்த டிசம்பர் மாதம் நடந்த அமெரிக்கத் தாக்குதலின்போது ஒஸாமா பின்லேடன் காயம் அடைந்தார் என்றும் - அவர் தற்போது குணம் அடைந்து வருவதாகவும் -

தகவல் வெளியாகி உள்ளது.

பின்லேடன் பதுங்கி இருந்த ஆப்கானின் தோராபோரா குகைப் பகுதியில் அமெரிக்கா குண்டு வீசி தாக்குதல் நடத்தியபோது, பின்லேடனுக்கு தோளில் காயம் ஏற்பட்டதாகவும் -

காயம் அடைந்த பின்லேடனுக்கு மருத்துவக்குழு சிகிச்சை அளித்ததில் அவர் இப்போது நன்கு குணம் அடைந்து வருவதாகவும் - தகவல் வெளியாகி உள்ளது.

பின்லேடன் தற்போது ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்கா மீது மீண்டும் ஒரு தாக்குதல் நடத்திய பிறகு பின்லேடன் வீடியோவில் தோன்றுவார். அதுவரையில் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் எண்ணம் அவருக்கு இல்லை.

இந்தத் தகவல்களை பின்லேடனுக்கு நெருக்கமான அரபுச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ)

# நேபாளத்தில் நிலச்சரிவு; 150 பேர் உயிரிழப்பு!

நேபாள நாட்டில் தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக திப்சுங், சிகுந்தல் என்ற 2 மலைப் பகுதி கிராமங்களில் அதிகாலை திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் இடிந்து நாசமாயின. இடிபாடுகளில் சிக்கி 150 பேர் பலியானார்கள். பலர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

நிலச்சரிவினால் அந்த 2 கிராமங்களும் நாசமாகிவிட்டன. தொடர்ந்து மீட்புப்பணி நடைபெறுகிறது.

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஹொட்டல் - புடைவைக்கடை - பல சரக்குக் கடை பாவனைக்குரிய, நல்ல நிலையில் உள்ள அலுமினிய, மர ஷோக்கேசுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.86, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (பீற்றர் வீடியோ முன்பாக). (6043)

Original Prima கோழித்தீன், தண்ணீர்ப் பாத்திரங்கள், சாப்பாட்டுப் பாத்திரங்கள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (6092)

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.சுந்தரலிங்கம், 588/4, நாவலர் வீதி (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 2894 (6102)

உடுப்பிட்டி, சந்நிதி பிரதான வீதியில் அமைந்துள்ள காணி ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. சந்திரசேகரி, 90,வித்தியாலயம் வீதி, திருகோணமலை. தொலைபேசி 21309. (6085)

நல்ல நிலையிலுள்ள கில்மன் 5-XXXX கார் விற்பனைக்கு உண்டு. விலை 60,000/-. தொடர்பு: No.6, மன்னார் வீதி, மதவாச்சி, T.P.No. 025 - 45748 (6097)

## தேவை

யாழ்.கோவில் வீதி அல்லது நாவலர் வீதி அல்லது பிறவுண் வீதியருகே 4 பரப்புக் காணி அல்லது வீடு தேவை. தொடர்பு: விளம்பரஇல.1573,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (6101)

## WANTED

A Medical Student, needs a room with basic facilities in the areas adjacent to Jaffna Hospital. Reasonable payment will be made. Contact Ad.No:- 1572, Uthayan. (6096)

## தவறிவிட்டது

இல.339, 4ஆம் யூனிற், திருநகர், மல்லாவியைச் சேர்ந்த வீரசிங்கம் தயாசீலனின் மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன அடங்கிய தினநாள் பதிவுப்புத்தகம் (டயறி) யாழ்பஸ நிலையப் பகுதிக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஐ. பொன்னுத்துரை, ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6078)

ஒரு கறுப்புநிற அலுவலகப்பை 14.7.2002 ஞாயிறு காலை யாழ்ப்பாணத்துக்கும் தாவடிக்கும் இடையில் K.K.S. வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Dr.S.பரராசசிங்கம், 18/4, B.A.தம்பி ஒழுங்கை, வண்ணார் பண்ணை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (6090)

தலங்காவல் பிள்ளையார் வீதி, கோயில் வீதி, சங்கிலியன் வீதி, கச்சேரி நல்லூர் வீதி ஊடான பாதையில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்.பொதுநூலகத்தின் கிளைகளிலோ, திருநெல்வேலி கஜன் தொலைத்தொடர்பு நிலையத்திலோ தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6071)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஜூலை18

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடத்தி வரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி ஆசிரியர் துணவியூர் சி. கேசவன் "உதித்தனன் உலகம் உய்ய" என்ற பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். (ஒ-135)

## மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

அச்சுவேலி,ஜூலை18

புத்தூர் மணற்பகுதி கிராமத்திற்கு மின்சாரம் விநியோகிக்கும்படி மின்சார சபையிடம் பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் மின்சார விநியோகம் நடைமுறைப்படுத்தப்பட்ட புத்தூர் மணற்பகுதி கிராமம் மீளக்குடியேறிய பின்னர் மின்சார விநியோகத்தில் புறக்கணிக்கப்பட்டுவருவதைச் சுட்டிக்காட்டி மின்சாரம் விநியோகிப்பதற்கு ஆவனசெய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் விநியோகம் தொடர்பான கோரிக்கையின் பிரதிகள் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-11)

## வடக்கு - கிழக்கு மாகாண சமாதான நீதிவான்கள் - JP'S

வடக்கு - கிழக்கு பகுதியில் 1980இற்குப் பின்னர் சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றவர்களின் விவரம் பெறப்பட்டு நூல்வடிவில் தரப்படவுள்ளது. எனவே சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

"DIRECTOR, HSCMF, NAVALY NORTH, MANIPAY"

இறுதி திகதி: 30.08.2002

(உங்கள் சிநேகித JPஇற்கும் அறிவியுங்கள்) (6106)

# உயர்தர வகுப்புக்கு புதிய பாடம்

அச்சுவேலி,ஜூலை18

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பாடம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

2004ஆம் கல்வி ஆண்டில் கல்வி பயிலும் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வாரத்தில் இரண்டு பாட வேளைகளை தகவல் தொழில்நுட்பம் குறித்த பாடத்திற்கு பயன்படுத்துமாறும் 60 வீதம் செயல் முறைக்கு இடமளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-11)

# மரண அறிவித்தல்கள்

## சின்னவன் சதாசிவம்

கம்பர்மலையைச் சேர்ந்த சின்னவன் சதாசிவம் நேற்று(17.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பூமாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னவன் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - அம்மிணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ரவீந்திரராஜா, புவீந்திரராஜா (கனடா), சாருமதா (கனடா), ராதாராணி (கனடா), கபிலேந்திரராஜா (கனடா), சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜாதேவி, இந்திராதேவி, புஸ்பகாந்தன், ரவிசிங்கம், ஜெயசோதி, இளையராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் திருச்செல்வம், லோகநாதன், இரத்தினமாலா, மனோகரி ஆகியோரின் அருமைச சகோதரனும் கனடாவில் வசிக்கும் ராஜ்குமார், ரஜிதா, லாவண்யா, பிரகதி, ஆர்த்திகா, சாருஷன், ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கம்பர்மலை,*
*சதாசிவம் கடையடி,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
ச.ரவீந்திரன்
*(மகன், சிவம் சவுண்ஸ் உரிமையாளர்)*
(6105)

## திருமதி சிவபாக்கியம் செல்வராசா

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சிவபாக்கியம் செல்வராசா 15.07.2002 திங்கட்கிழமை சுவிஸில் தன் மகன் வீட்டில் காலமாகிவிட்டார்.

அன்னார் கலைச்செல்வி (சுவிஸ்), இரவீந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்), சுபேந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தெட்சணாமூர்த்தி (சுவிஸ்), புஸ்பகாந்தி, அனுசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விதுரிசன், ரசிகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம். (பெரிய மதவடி)*

(6100)

*தகவல்:*
அ.செல்வராசா
*(கணவர்)*


சுடர் ஒளி

அதிரடி விலைக் குறைப்பு

விலை 14/=

16-07-2002 இதழில்

- திருமலையை திணறடிக்கும் அனல் மின் நிலையம்!
- இரணைதீவுக் கடல் சம்பவம்
  சமாதான முயற்சிகளுக்கு மற்றொரு அச்சுறுத்தல்.
- கிழக்கு நெருக்கடியின் பின்னணி
  எழும் பல்வேறு சந்தேகங்கள்.
- எம்.ஜி.ஆர் செய்த புண்ணியம் ஜெயலலிதாவால் போச்சு!
- தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினுள்
  தொடரும் முறுகலும், முறுவலும்!
- மற்றும் அரசியல் அம்பலம், சொற்சிலம்பம்,
  பித்தன் பதில்கள், மசாலா மிக்ஸ், சிறுவர் பகுதி,
  இலவச மருத்துவ ஆலோசனை உட்பட
  மற்றும் சுவையான அம்சங்கள்.

சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3 ரூபாவால் குறைக்கப்படுகிறது.
*உங்கள் முகவரிடம் மறக்காமல் கேட்டுவாங்குங்கள்.*




(சி-22971)

உதயன்

# அரசியல் பலப்பரீட்சைக்கு நடக்கும் ஆயத்தங்கள்!

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் இடையிலான உரசல் பெரும் அரசியல் மோதலாக வெடிக்கும் என்பதற்கான சமிக்ஞைகள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்று புதிதாகத் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலம் ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்த பின்னர், தான் விரும்பிய எந்த நேரத்திலும் அந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடும் அதிகாரம் தற்போதைய அரசமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு உண்டு.

இதன்படி தற்போதைய ஐ.தே.மு.அரசை - அதன் பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்ததும் - எந்த நேரத்திலும் ஜனாதிபதி சந்திரிகா கலைக்க முடியும்.

தலைக்கு மேல் கத்தி தொங்கும் வகையிலான இந்த ஆபத்திலிருந்து தனது அரசைப் பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பறிக்கத் திட்டமிட்டது பிரதமர் ரணிலின் அரசு.

ஆனால், அதற்கு அரசமைப்பைத் திருத்த வேண்டும். அப்படித் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு எம்.பிக்களின் ஆதரவு அரசுக்குத் தேவை.

எதிரணியில் இருக்கும் கணிசமான எம்.பிக்களை வளைத்துப் போட்டு இந்தக் காரியத்தைச் சாதிக்கலாம் என்ற தெம்புடன்தான் இத்தகைய முயற்சியை ஆரம்பித்தது அரசு. ஆனால், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அவ்வாறு தேவையான - ஒன்றரை டசினுக்கும் குறையாத - எம்.பிக்களை எதிர்க்கட்சிகளான பொ.ஐ.மு.தரப்பிலிருந்தோ, ஜே.வி.பி. தரப்பிலிருந்தோ மடக்கிப் பிடிப்பது சாத்தியமானதல்ல என்பது அரசுத் தரப்புக்குப் புரியத் தொடங்கிவிட்டது.

எனவே நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பறிக்கும் முயற்சியை விடுத்து அந்த அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்தாமல் தடுக்கும் வழிவகைகள் ஏதும் உள்ளதா என்று அரசுத்தரப்பு 'சட்ட மூளைகள்' ஆராய்ந்ததாகக் கூறப்படுகின்றது.

அதன் பயனாக அரசுத் தரப்புக்கு கையில் கிடைத்த ஆயுதந்தான் ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை.

ஜனாதிபதி செய்த குற்றத்துக்காக அவரை நீதி விசாரணைக்கு முன்நிறுத்தி அவரது பதவியிலிருந்து அவரை அகற்ற இந்த வழிமுறை உதவும். ஆனால், அப்படி அவரைப் பதவி நீக்கம் செய்யும் முயற்சி வெற்றி பெறவும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு தேவை.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது உட்பட நிறைவேற்று ஜனாதிபதிக்கு உள்ள பல்வேறு அதிகாரங்களை பறிப்பதற்கு தேவையான பலத்தை நாடாளுமன்றத்தில் திரட்டமுடியாத ஐ.தே.மு.அரசு, ஜனாதிபதியை குற்ற விசாரணைப் பிரேரணை மூலம் பதவிழக்கச்செய்வதற்குத் தேவையான அதே நாடாளுமன்றப் பலத்தை மட்டும் எப்படிப் பெற்றுக் கொள்ளப் போகின்றது?

மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை பதவி நீக்க வைப்பதற்கான நாடாளுமன்றப் பலம் தன்னிடம் இல்லாவிட்டாலும் அத்தகைய முயற்சியை ஆரம்பிப்பதன் மூலம் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்தாமல் தடுக்கமுடியும் என்று கருதுகின்றது அரசு.

ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தின் முன் குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான விடயங்கள் தீர்க்கப்படும் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என அரசமைப்புக் கூறுகின்றது.

எனவே இத்தகைய முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம், தனது அரசின் தலைக்கு மேல் தொங்கும் 'நாடாளுமன்றக் கலைப்பு' என்ற கத்தியிலிருந்து அரசுக்கு கேடயம் ஒன்றை அமைக்க முயல்கிறார் பிரதமர்.

அதேசமயம் தமக்கு எதிராகக் குற்றவிசாரணைப் பிரேரணை ஏதும் சமர்ப்பிக்கப்பட்டால், அதை முறியடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு சவால் விடுக்கக் காத்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

இச்சூழ்நிலை அடுத்துவரும் மாதங்களில் தெற்கில் பெரும் அரசியல் பலப்பரீட்சைக்கான மோதல்கள், பூகம்பங்கள் வெடிக்கப்போகின்றன என்பதற்கு கட்டியம் கூறுவதாகவே உள்ளது.

### இர[illegible]வுக் கடற்சம்பவம்

# எச்சரிக்கை வேட்டே தீர்க்கப்பட்டதாம்

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை18

'இரணைதீவுக் கடலில் கடற்படையினர் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறினர்' என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை கடற்படை மறுத்திருக்கிறது.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரி நேற்றுமுன்தினம் காலை தனியார் தொலைக்காட்சி ஒன்றுடனான உரையாடலின் போதே இந்த மறுப்பைத் தெரிவித்தார்.

கடற்படையினர் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறவில்லை என்றும் புலிகளின் படகொன்றைப் படையினர் சோதனையிட்ட பொழுது, நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாத மீன்பிடி வலைகள் அதில் இருந்தன என்றும் கடற்படைத் தளபதி கூறினார்.

புலிகளின் படகை எச்சரிக்கவே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் -

புலிகளின் படகை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை என்றும் -

தளபதி சந்தகிரி மேலும் கூறினார். (ஒ)

# சமாதான முயற்சிக்கு எதிராக மாணவரைத் தூண்டிவிடச் சதி!

## கல்வி அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு,ஜுலை18

அரசின் சமாதான முயற்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்த தேசவிரோத சக்திகள் முயற்சிப்பதாக கல்வியமைச்சுக்குத் தெரியவந்திருக்கிறது. தாய்நாட்டைக் காக்கும் கோஷத்தின் போர்வையில் மாணவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்த ஒரு குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர்.

இதுபற்றி நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்திருப்பதால் பாடசாலைகளுக்குள் தனியார் நுழைவதைத் தடுக்கும்படி பாடசாலை அதிபர்களை கல்வியமைச்சு கோரியிருக்கிறது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அமைச்சு கேட்டிருக்கிறது. இது தொடர்பாக கல்வியமைச்சு அறிக்கை ஒன்றை விடுவித்திருக்கிறது.

குறிப்பிட்ட சில பாடசாலைகளில் பிரச்சினைகளை உருவாக்கி மாணவர்களைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்துவது இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாகும். இப்பகிஷ்கரிப்போடு அப்பிரதேச ஏனைய பாடசாலைகளின் மாணவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்துவது அடுத்த நடவடிக்கையாகும். இவை தொடர்பாக பெற்றோர் விழிப்பாக இருக்கவேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ)

# இளைஞர் சேவைகள் மன்ற மாநாட்டில் பிரபாகரன் அதிதி?

## இப்படிக் கூறுகிறது 'லக்பிம'

கொழும்பு,ஜுலை18

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த மாநாட்டில் பிரதமஅதிதியாகக் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அழைப்பு விடுவது என அம்மன்றம் தீர்மானித்துள்ளது என "லக்பிம" வார இதழ் தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகளின் பூரண ஒத்துழைப்புடன் அடுத்த மாதப் பிற்பகுதியில் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்கான பூர்வாங்கப் பணிகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள 315 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூவாயிரம் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். வடக்கிலும் தெற்கிலுமுள்ள இளைஞர், யுவதிகளிடையே கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

ஸ்ரீலங்கா இளைஞர் மன்றத்தின் கிளைப் பணிமனை ஒன்றைக் கிளிநொச்சியில் திறந்து வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் -

இளையதலைமுறையின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அப்போது விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஆராயப்படும் எனவும் -

இளைஞர் மன்றத்தின் செயலாளர் சஜீவ உபுல்ஜீத் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டிற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சமுகமளித்தால் கடந்த 20 ஆண்டுகளில் அவர் பொதுமக்களுடன் கலந்துகொள்ளும் முதல் வைபவமாக இது அமையும் என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஒ)

# இலங்கையரல்லாதோர் யாழ்.வர கட்டுப்பாடு நீக்கம்

கொழும்பு,ஜுலை18

வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கையர் அல்லாதோர் வடக்கே செல்ல பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை நீக்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் எஸ்.ஜி.கருணரத்ன இது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் சுமுகமான நிலை வடக்கில் ஏற்பட்டிருப்பதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-12)

### நாடாளுமன்றத்தை கலைக்கமாட்டேன்

# என் மீது குற்றவியல் பிரேரணையை முடிந்தால் அரசு கொண்டுவரட்டும்

## ஜனாதிபதி சந்திரிகா சவால்

'இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொறுப்பு பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே தீர்வு காணும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு நான் இருமுறை பிரதமரைக் கேட்டுக்கொண்டேன். இந்நிலையில் நடப்பவற்றை நான் அவதானித்துக்கொண்டிருக்கிறேன். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அரசியலமைப்புச் சட்டத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி செயல்படுவேன்' - இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

'நாடாளுமன்றம் ஒரு வருடம் பூர்த்தியானதும் அதனைக் கலைக்கும் நோக்கம் எனக்கு இல்லை. என்மீது அரசியல் குற்றவியல் பிரேரணைகொண்டுவருவதற்குரிய எந்தத் தவறுகளையும் நான் செய்யவில்லை. அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்படும் என என்னை அச்சுறுத்தப் பார்க்கின்றனர். முடிந்தால் என் மீது அரசியல் குற்றவியல் பிரேரணையை கொண்டு வரட்டும்' - என்றார். (ஒ)

# அரசின் சமாதான முயற்சிக்கு விமானப்படையினர் ஒத்துழைப்பு

## பதவியேற்றபின் புதிய தளபதி உறுதி

கொழும்பு,ஜுலை18

'அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு இலங்கை விமானப்படையினர் பரிபூரண ஒத்துழைப்பை வழங்குவர்' இவ்வாறு உறுதி தெரிவித்தார் விமானப்படைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா நேற்று முன்தினம் காலை தனது புதிய பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டு விமானப்படை யினர் மத்தியில் பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

'விமானப்படையில் தற்போது அதிநவீன போர்விமானங்கள் மற்றும் ஏனைய விமானங்கள் உள்ளன. இவற்றை நாம் நலல முறையில் பயன்படுத்தி அனுபவம் பெற வேண்டும். சிறந்த விமானப் படையினராக திகழவேண்டும். தற்போது நாட்டில் சமாதானம் நிலவுகின்றது. இம்முயற்சிக்கு விமானப்படையினர் அரசுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவர். இன்று விமானப்படையின் புதிய தளபதியாக பதவியேற்றுள்ள நான் சகல அதிகாரிகள், வீரர்கள், சிவில்ஊழியர்கள் உட்பட சகலரதும் பூரண ஒத் துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ள நிலையிலும் நாம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எந்நேரமும் தயாரானவர்களாகவே உள்ளோம். ஒருபோதும் தளர்ச்சி அடையவோ பின்வாங்கவோ போவதில்லை - என்றார். (ஒ)

### நாளை

ஆடி03
வெள்ளிக்கிழமை
(19.07.2002)
திதி : தசமி
முன்னிரவு 7.38 வரை.
நட்சத்திரம்: விசாகம்
முன்னிரவு 8.54 வரை
மரணயோகம்
சுபநேரம் : 6.01 - 7.31
ராகுகாலம் : 10.31 - 12.01
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சரியானது என்று தெரிந்த பின்னும் அதனை செய்யத் தயங்குபவன் கோழை.

# புஷ் - ரணில் சந்திப்பு

கொழும்பு,ஜுலை18

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எதிர்வரும் 24ஆம் திகதி சந்திப்பார். வெள்ளை மாளிகை இதனை அறிவித்திருக்கிறது.

பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களையும் இனப்பிரச்சினைக்குச் சமா தான முயற்சி காணும் இலங்கையின் முயற்சிகள் குறித் தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்துவர் என்று வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் அரி பிளெச்சர் தெரிவித்திருக் கிறார். (ஒ)

**ஜே.கே அரங்கள்**



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற. பெறுமதிக்கு பொருத்தமான. ஜே.கே அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

ஜெனரல் எக்கியுப்மன்ட்ஸ் லிமிடெட்

316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-12.
போன்: 345046, 327264, 343822, 430799 பெக்ஸ்: 434637


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கந்தசாமி சோதிரூபன்

*(ஆசிரியர், யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)*

கல்லூரியின் ஒவ்வொரு அக, புற செயற்பாடுகளிலும் தனது தடம்பதித்து, கற்பித்த கல்லூரியை உள்ளார்த்தமாக நேசித்த அன்னாரது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C/22968) - பழைய மாணவர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை
திருமதி கோ.தவராஜா
அவர்களின் பாசமிகு மாமியார்

### திருமதி வள்ளிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை

அவர்களின் மறைவையிட்டு துயருறுகின்ற அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(6076) கொக்குவில் இந்துக் கல்லூரி.

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 23 - 07 - 1927



உதிர்வு 18 - 06 - 2002

### திருமதி வி[illegible]சித்தம்பி இராசம்மா

([illegible]நகர், களபூமி)

*யாழ். மண்ணில்*
*சிதம்பர மணி ஒலித்திடும்*
*தேசமதில்,*

*அன்பினால்*
*மக்கள் மனம் ஆண்ட*
*விநாசித்தம்பி இராசம்மா - என்ற*
*அன்பரசி,*
*அக்னியால்*
*அரவணைக்கப்பட்டாலும்*
*விரிவிட்ட அன்பலையால்*
*ஆண்டுகள் பலவும்*
*அகல்விளக்காய் மிளிர்ந்திடுவாள்*
*அகிலம் உள்ளவரை!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*47, பிரப்பங்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/22967)

## வேலணை மறியலின் சுலோக வாசகங்கள்

வேலணை,ஜூலை18

வேலணையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாங்கியிருந்த அட்டைகளில் காணப்பட்ட சுலோகங்கள் சில வருமாறு:-

★ பேனாவைத் தூக்கும் கையால் துப்பாக்கியைத் தூக்க வைக்காதே!

★ மாணவர்களின் உரிமைகளைப் பறிக்காதே!

★ குழந்தை நெஞ்சங்களில் மிருக வெறியினை ஊட்டாதே.

★ கறுப்புக் கொடியைத் தூக்கிய நாம் இனியாவது வெள்ளைக் கொடியுடன் நிற்பதற்கு வழிவிடு.

★ இத்தனை நாள் சிறையில் இருந்த எம்மை சிறகடித்துப் பறக்கவிடு.

★ மாணவர்களையும் பெற்றோர்களையும் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்யவிடு.

- என்றிருந்தன. (ஓ-167-ரி)

## சாரணிய வழிகாட்டுநர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவிருக்கின்றது என்று சாரணிய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஓ-3)

## நந்திக்கொடி வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து இந்துப் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நந்திக் கொடிகளை இலவசமாக வழங்க இந்து கலாசார அமைச்சு நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றது.

பாடசாலைகள், நிறுவனங்களில் நடைபெறும் பொதுநிகழ்வுகளில் நந்திக்கொடி ஏற்றும் நிகழ்வும் இடம்பெற்று வருவதால் அவற்றுக்கு நந்திக்கொடியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார். (ஓ-180)

## பாக்.அதிபருடன் அமைச்சர் டிரோன் பேச்சு

இஸ்லாமாபாத்,ஜூலை18

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்புடன் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர சிரத்தையுடைய விடயங்கள குறித்து அவர்கள் பேசினர்.

பாகிஸ்தான் வெளிவிவகார ராஜாங்க அமைச்சரையும் சந்தித்து இலங்கை அமைச்சர் பேச்சு நடத்தினார்.

பாகிஸ்தான் வர்த்தக, நிதி அமைசர்களையும் சந்தித்து அவர் பேச்சு நடத்துவார் என்று செய்திகள் தெரிவித்தன. (ஓ)

## நூல் வெளியீட்டு விழா


யாழ்ப்பாணம்,ஜூலை18

'காரைநகர் தொன்மையும் வன்மையும்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ச.ஆ.பாலேந்திரன் எழுதிய இந்நூலின் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்கிறார். (ஓ-9)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 03 - 1974



உதிர்வு 14 - 07 - 1997

### அருமைத்துரை அகிலகரன்

திதி:- 18.07.2002

**எங்கள் கண்ணின் மணியே நீர் எம்மைவிட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகளாகின்றன. எங்கள் அன்பு மகனின் ஆத்மா சாந்தியுறும் வண்ணம் இறைவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.**

அம்மா, அப்பா
குடும்பத்தினர்.

*நாகபூஷணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(6093)

## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் வசமுள்ள சான்றிதழ் களுடன் பனை காவல் பணிமனையில் இன்று 18.07.2002 முதல் 28.07.2002 வரை நேரில் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர.

**01.உப பரிசோதகர் (SUB INSPECTOR)**

*கல்வித் தகைமை:* க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட 5 பாடங்களில திறமைச்சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

*வயது:* 20 தொடக்கம் 30 வரை.

*உயரம்:* 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

**02.காவலர் (POLICE CONSTABLE)**

*கல்வித் தகைமை:* க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணித பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 20 தொடக்கம் 30 வரை.

உயரம்: 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

**03.எழுதுவினைஞர்கள் (CLERKS)**

*கல்வித் தகைமை:* க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*வயது:* 20 முதல் 30 வரை.

*உயரம்:* 5 அடி 6 அங்குலத்துக்கு மேல்.

*மேற்கூறிய பதவிகளுக்கு தங்குமிட வசதி, உணவு, சீருடை, போக்குவரத்து, மருத்துவம் என்பன வேதனத்துடன் மேலதிகமாக வழங்கப்படும்.*

பொறுப்பாளர்,
ஆளணிப் பிரிவு, காவல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-22957)

## மரண அறிவித்தல்

### செல்வி அனுசியா முத்துராசா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அனுசியா முத்துராசா 15.07.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் முத்துராசா - பத்மாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் கிருத்திகன், சிந்துஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவநகர், உருத்திரபுரம் இல்லத்தில் இன்று(18.07.2002) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
செ.ஏரம்பநாதன்
*(சிறியதந்தையார் - ஜெமினி)*

*47/6, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

(6098)




# உடன்படிக்கையில் உள்ளவற்றை நிறைவேற்றுவதில் அரசு மெத்தனம்!

## மாவை, விநாயகமூர்த்தி கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜுலை18

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தாததற்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர்.

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர்கள் தமது கண்டனத்தை வெளியிட்டனர். தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அங்கு உரையாற்றியபோது -

'தமிழ் மக்களாகிய எமது வயல் நிலங்கள், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் என்பவற்றில் இருந்து இராணுவத்தினர் இன்னும் வெளியேறாமல் இருப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலாகும். அரசாங்கம் இவ்விடயத்தில் தொடர்ந்து அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவது கண்டனத்திற்குரியது.

'இதனால், எமது மக்களின் வாழ்க்கை வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. எனவே அரசு இப்பிரச்சினை தொடர்பாக விரிவாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எமது கோரிக்கை நிராகரிக்கப்படும் பட்சத்தில் நாம் மீண்டும் பெரிய அளவிலான தொடர் போராட்டங்களை நடத்தவும் தயாராகவுள்ளோம். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரதமர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நாம் கடுமையாக விவாதிக்கவுள்ளோம்' என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தனதுரையில் கூறியதாவது:-

'எமது பொறுமையை அரசாங்கம் சோதித்துப் பார்க்க வேண்டாம். இதனால் பொதுமக்கள் விசனமடைந்து தொடர் போராட்டங்களை நடத்த வேண்டிவரும். அந்தளவிற்கு தமிழ் மக்களை விசனமடைய அரசு அனுமதிக்கக்கூடாது. இது அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஏற்றதல்ல.

'உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை விரைவாக நடைமுறைப்படுத்துவதில் இனியாவது அரசு கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

'எமது மக்கள் தமது வீடுகளில் மீளக் குடியமர்ந்து சுதந்திரமாக தமது வாழ்க்கையைத் தொடர அரசு ஆவன செய்யவேண்டும்' என்றார். (ஒ-8)

# நீர்ப்பாசன அமைச்சருடன் புலிப் பிரதிநிதிகள் பேச்சு

கொழும்பு,ஜுலை18

வவுனியாவிற்கு விஜயம் செய்த நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேராவை விடுதலைப் புலிகளின் நடுவகப் பணியக உறுப்பினர்கள் சந்தித்து உரையாடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைச்சர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் விடுதலைப் புலிகளின் நடுவகப் பணியக மேம்பாட்டுப் பிரிவு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அப்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வன்னிப் பிரதேசங்களில் நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள் பல இடம்பெறாதிருப்பதைச் சுட்டிக்காட்டியதுடன் அவற்றிற்கான திருத்த வேலைகள் இடம்பெறவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான மாவட்டங்களில் நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி பணிகளில் தடங்கல் மற்றும் ஆளணிப் பற்றாக்குறை சம்பந்தமான முறைப்பாடுகளை முன்வைத்தபோது அமைச்சர் முடிந்தளவு அந்தக் குறைபாடுகளை சீர்ப்படுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன், வன்னிப்பகுதி நீர்ப்பாசன அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

(ஒ-12)

# இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைக்க பிரதமருக்கு அழுத்தம்!

## கொடுப்பதாகக் கூறுகிறார் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஜுலை18

'நிரந்தர சமாதானம் ஏற்பட விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்க வேண்டும். அதற்கு அரசிற்கு தான் அழுத்தம் கொடுத்து வருகின்றேன்.'

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டட திறப்பு விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய இந்து சமய விவகாரங்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் எஸ்.யோகராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்துரையாற்றிய அமைச்சர் -

'புலிகளின் ஒரு நிர்வாக அமைப்பின் கீழேயே தமிழ்மக்கள் நிம்மதியாக வாழ முடியும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அந்த வகையில்தான் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

'இதனை விரைவுபடுத்தி விடுதலைப் புலிகளை இடைக்கால நிர்வாகத்தில் பங்குபெற நான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருக்கிறேன்.

'இது நிறைவேற அனைவரும் ஒன்றுபட்டு பாடுபடவேண்டும். முன்னைய அரசில் இருந்தவர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளாமல் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு நிதியை செலவழித்துள்ளனர். இதுபோன்று இனிவரும் காலங்களில் நடைபெற மாட்டாது.

'எமது அமைச்சு தற்போது யுத்தத்தினால் அழிந்து போயுள்ள வழிபாட்டுத்தலங்களை முதற்கட்டமாக புனரமைப்பு செய்து வருகின்றது. முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு 3 லட்ச ரூபாவும் திருமலைக் கேணி புனரமைப்புக்கு 3 லட்ச ரூபாவும் எமது அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

'யாழ்.மாவட்டத்தில் உள்ள 23 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளுக்கும் கணனிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாணவர்கள் கல்வியை எந்த இன்னல் வந்தும் கைவிடாத காரணத்தினால் தான் வெளிநாடுகளில்கூட ஈழத் தமிழர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையினை எதிர்கால சந்ததியினரும் தொடர வேண்டும்' - என்றார்.

(ஒ-180)

# உடன்படிக்கைக்கு எதிரான புதிய இயக்கம் உருவானது

கொழும்பு,ஜுலை18

'தேச மீட்பு மாணவர் முன்னணி' என்ற அமைப்பை தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இடைக்கால நிர்வாக ஒழுங்குகள் ஆகியவற்றின் மூலம் நாடு துண்டாடப்படவுள்ளதாகவும் -

இதனைத் தடுக்க மக்களை விழிப்படையச் செய்யும் நோக்குடனேயே இது உருவாக்கப்பட்டுள்ளதாகவும் - அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு தனது நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம்முதல் ஆரம்பித்துள்ளது.

வடக்குக் கிழக்குத் தவிர்ந்த பிற மாவட்டங்களில் வீடுவீடாகச் சென்று நாடு துண்டாடப்படப்போவது குறித்து மக்களை விழிப்படையச் செய்வதே தமது முதல் நடவடிக்கை என்று மேற்படி அமைப்பைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-12)



கொக்குவில் இந்திரா சனசமூக நிலைய திறப்புவிழா சமீபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட அப்பகுதி கிராம சேவையாளர் எஸ்.ஏ.வி.சுந்தரலிங்கம் நாடாவை வெட்டி சனசமூக நிலையத்தை திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# கடற்படையினரின் நடவடிக்கையால் கல்வி செயற்பாட்டுக்கு அச்சுறுத்தல்!

## தீவக நலன் காப்பகம் மகஜர்

யாழ்ப்பாணம்,ஜுலை18

'தீவகத்தில் புதிய படைமுகாம்கள் அமைத்து வீதிகளை மூடி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்' இவ்வாறு தீவக மக்கள் நலன் காப்பகம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவைக் கேட்டுள்ளது.

வேலணையில் நேற்றுமுன்தினம் நடந்த வீதிமறிப்புப் போராட்டத்தின் போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வேலணை அலுவலகத்தில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அந்த மகஜரிலேயே மேற்கண்டவாறு கேட்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரதான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டு தீவகத்தில் இயங்கும் பிரதான பாடசாலையின் மாணவர்களது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் இடையூறு விளைவித்தும், பாடசாலைச் சூழலில் காலங்காலமாக இருந்து வந்த விவசாய விளைநிலங்களை சீரழித்தும், புதிய காப்பரண்களை அமைத்தும், பாடசாலையையும் பிரதான வீதியையும் இணைக்கும் உப வீதிகளை மறித்தும் கடற்படையினர் செய்யும் யுத்தநிறுத்த மீறல்களைத் தங்கள் கவனத்திற்குப் பல முறை அறியத்தந்தும் தாங்கள் மக்களின் இயல்புநிலையைத் தோற்றுவிக்க எந்த வகையிலும் உதவுவது போல் தோன்றவில்லை. இதனால் மீண்டும் பொதுமக்களும் மாணவர்களும் இணைந்து மாபெரும் வழிமறிப்புப் போராட்டத்தில் குதிக்கவுள்ளோம். நல்ல தீர்வை எமக்குப் பெற்றுத் தரும்வரை வெகுஜனப் போராட்டம் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருக்குமென்பதை மனவேதனையுடன் அறியத் தருகின்றோம்.

★ பாடசாலை மாணவர்கள் மட்டும் கடற்படை முகாம் அமைந்திருக்கும் பகுதியூடாகப் பாடசாலை செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இது மாணவர்களிற்குப் பாதுகாப்பானதல்ல. முன்பு ஒருமுறை மாணவர் ஒருவர் துன்புறுத்தப்பட்டமை நாம் அறிந்ததே. எனவே இவ்வழியால் மாணவர் பயணம் செய்வதற்கு அச்சமடைந்துள்ளனர்.

★ இவ்வீதியூடாக காலை 8.30 மணிக்கு மட்டும் ஒரு பஸ் சேவை மாத்திரம் அனுமதிக்கப்படுகிறது. ஏனைய நேரத்தில் பஸ் சேவை அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் பிந்திவரும் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாதுள்ளது.

★ சிற்பனை வீதி, மயிலப்புலம் வீதி மூடப்பட்டுள்ளதால் நடந்துவரும் மாணவர்கள் மிக நீண்ட தூரம் சுற்றி பாடசாலைக்கு வரவேண்டி உள்ளது.

★ பாடசாலைக்கு மிக அண்மையில் முகாம் அமைக்கப்பட்டு பாதுகாப்பு அரண்கள் பலப்படுத்தப்பட்டு வருவதால் மாணவர்கள் அச்சம் காரணமாக பாடசாலைக்குச் செல்லாமல் விடுகின்றனர்.

★ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இக்கடற்படை முகாம் பலப்படுத்தப்பட்டுப் புதிய காவல் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மிகப் பாரிய அளவில் வயல்கள், தோட்ட நிலங்கள் உள்ளடக்கப்பட்டு இயந்திரத்தின் உதவியுடன் பாரிய மண் அணைகள் போடப்படுவதால் மக்கள் மீளக்குடியமர அஞ்சுகின்றனர்.

இவை தொடர்பான எமது கோரிக்கைகளுக்கு நல்ல தீர்வு கிட்டும் வரை வெகுஜனப் போராட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமையும் என்பதை வேதனையுடன் அறியத்தருகின்றோம் - என்றுள்ளது.

(ஒ-8)

# 13ஆவது வீரமக்கள் தின இறுதிநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை18

'புளொட்' அமைப்பின் 13ஆவது வீரமக்கள் தின இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் அந்த அமைப்பின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றன.

அன்று காலை 10 மணியளவில் புளொட் அமைப்பின் செயலதிபர் அமரர் க.உமாமகேஸ்வரனின் உருவப்படத்துக்கு உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் யாழ்.மாநகரசபை உறுப்பினர் மு.தவநாதன் தலைமையில் நினைவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ்.மாநகரசபை முதல்வர் செ.கந்தையன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) பிரமுகர் த.சுபத்திரன், இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ. சி.வேலாயுதம், எஸ்.பாலச்சந்திரன், எஸ்.எம்.ஜி.முபீன் மற்றும் புளொட் அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் செ.இருதயராஜன், உறுப்பினர் ச.ஜெயச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிகழ்வில் அமரர் உமாமகேஸ்வரனின் உறவினர்கள் உட்படப் பொது மக்களும் கலந்துகொண்டனர். இந்த வீரமக்கள் தினத்தையொட்டி வன்னிப் பிரதேசத்தில் இருந்து மீளவும் நாவாந்துறைப் பகுதியில் குடியமர்ந்துள்ள 32 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதாக புளொட் அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் செ.இருதயராஜன் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)

# கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு கொழும்பில் தலைமையகம்

கொழும்பு,ஜுலை18.

தேசிய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைமையகம் கொழும்பில் செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத் தலைமையகத்தில் தற்காலிகமாக இந்த அலுவலகம் செயற்படவுள்ளது.

இவ்வமைப்பு, கண்ணிவெடிகள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவற்றை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதற்காக 6 லட்சத்து 40 ஆயிரம் டொலர்கள் அவுஸ்திரேலிய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-12)

# கும்புறுப்பிட்டி பாடசாலையில் மாணவர்கள் மறியற்போர்!

திருகோணமலை,ஜுலை18.

கும்புறுப்பிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை பாடசாலை முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு போதிய ஆசிரியர்கள், தேவையான தளபாடங்கள் மற்றும் சீரான கட்டடங்கள் என்பன இல்லை என்றும் -

இவற்றை விரைவில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் -

கோரியே இவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்குள் யாரும் நுழைய முடியாதவாறு வாசலை மூடிவிட்டு அங்கு அமர்ந்தபடி அதிகாலைமுதல் மாணவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-9)

# வளமான வாழ்வினிற்கு வழிகாட்டும் 'பயோட்டின்'

நீளமான கூந்தல், கருகருவென்ற தலைமுடி என்பது பெண்களின் சமாசாரம் என்றே இருந்த காலம் உண்டு. ஆனால், இன்றைய நவநாகரிக உலகில் இருபாலாருமே தமது தலைமுடியில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் தோற்றப் பொலிவுக்கு அடிப்படைகளான தோல் மற்றும் நகங்கள் ஆகியவற்றைப் பேணுவதும் நாகரிகத் தோற்றத்துக்கு அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர்.

இன்றைய உலகின் நாயகர்களான இத்தகையவர்களுக்காகவே அறிமுகமாகியுள்ளது 'பயோட்டின் H-250'.

நீரில் கரையக்கூடிய பயோட்டின் H ஒருவரின் வாழ்க்கைக்கு அவசியமானது. இது விட்டமின் கூட்டமைப்பின் ஒருவகையாகும். அத்துடன் இது ஒரு துணை நொதியமாகச் செயற்பட்டு புரதம் (அமினோ அமிலம்), கொழுப்பு, மாப்பொருள் போன்றவைகளிலிருந்து சக்தியைப் பெற உ... ின்றது.

முடி உதிர்தல், மெல்லிய உடையக்கூடிய முடி, பிரிவுபட்ட முடி, வளர்ச்சி குறைந்த முடி, இளநரை போன்றவையினாலோ அல்லது தோல் பிரச்சினைகளாலோ (அதாவது காய்ந்த கரடு முரடான சருமம்) அல்லது விரல் நகங்களின் வளர்ச்சிக் குறைவினாலோ, மெல்லிய நகங்கள் போன்ற பிரச்சினைகளினாலோ பாதிக்கப்பட்டு மனவேதனையுடன் இருப்பவர்களுக்கு பயோட்டின் H-250 வரப்பிரசாதமாகும்.

அதுமட்டுமன்றி பயோட்டின் H-250,

★ உணவில் அடங்கியுள்ள புரதம், போலிக் அமிலம், பென்தோலிக் அமிலம், விட்டமின் B-12 ஆகியன உடம்பில் சேர உதவுகின்றது.

★ மாப்பொருள், புரதம் ஆகியவைகளிலிருந்து சக்தியைப்பெற உதவுகின்றது.

★ உடம்பிற்கு அவசியமான ஓமோன்களையும் இழந்த சக்திகளையும் மீளமைக்க உதவுகின்றது.

★ தரமான, ஆரோக்கியமான தலைமுடியின் வளர்ச்சிக்கு, தலையில் இயற்கையான எண்ணெய்ப் பசையை உருவாக்க உதவுகின்றது.

★ ஆரோக்கியமான தலைமுடி, வலுவான விரல் நகங்கள், சீரிய சருமம் ஆகியவை உருவாக அத்தியாவசியமானது.

இரத்தச்சோகை நோய் உள்ளவர்கள், இரத்தத்தில் (கொழுப்பு) இலிப்பிட்டு அதிகம் உள்ள நோயாளிகள், பசியின்மையால் (உணவில் வெறுப்பு) அவதிப்படுபவர்கள், உளச்சோர்வினால் அவதிப்படுபவர்கள், தொடர்ச்சியாக நோய் எதிர்ப்பு மருந்து பாவிப்பவர்கள், மதுவிற்கு அடிமையானவர்கள், புகைப் பிடிப்பவர்கள் எனப பலவகைப்பட்டவர்கள் பயோட்டின் H என்ற குறை நிரப்பு மாத்திரையைப் பாவித்துப் பயனடையலாம். ☆




# சர்வதேச கூரியர் சேவையில் சரித்திரம் படைக்கும் ரி.என்.ரி.




'எற்கின் ஸ்பென்ஸ்' நிறுவனத்தினர் தமது 'கூரியர்' சேவை மற்றும் சர்வதேச விமானப் பயணங்களுக்கான ஏற்பாட்டு ஒழுங்குகள் தொடர்பாக யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கருத்தரங்கு ஒன்றை நடத்தினர்.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் 139ஆம் இலக்கக் கட்டடத்தில் இயங்கும் 'ஏஸ் காகோ' நிறுவன ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் 'எற்கின் ஸ்பென்ஸ்' நிறுவனத்தாரின் சேவைகள் குறித்து விளக்கப்பட்டது.

குறிப்பாக 'ஏஸ் காகோ' நிறுவனத்தின் ரி.என்.ரி. சர்வதேச கூரியர் சேவை பற்றி விளக்கப்பட்டது.

'விரைவு, பாதுகாப்பு, குறைந்த கட்டணம்' ஆகிய மூன்று விடயங்களைத் தமது இலட்சியங்களாகக் கொண்டு ரி.என்.ரி. சர்வதேச கூரியர் சேவை இயங்குவதாகக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

➢ கடிதங்கள், சான்றிதழ்கள், கடவுச் சீட்டுக்கள், பலகாரங்கள், அன்பளிப்புப் பொருள்கள், கோயில் பிரசாதங்கள், ஆடையணிகள் போன்றவற்றை வெளிநாட்டிலுள்ள உறவினர், நண்பர்களுக்கு 3 நாள்களில் அனுப்பிடவும் -

வெளிநாட்டில் உள்ளவர்கள் பொருள்கள், கடிதங்களை அந்நாட்டு ரி.என்.ரி. நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அனுப்பினால் 3 நாள்களுக்குள் யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளவும் -

➢ குறைந்த கட்டணத்தில் 10 நாள்களிற்குள் வெளிநாட்டிலுள்ளவர்களுக்குத் தபால்களை அனுப்பவும் -

➢ இலங்கைக்குள் 2 நாள்களில் கடிதங்கள், பொருள்களை அனுப்புவதற்கும் -

ரி.என்.ரி. சேவை உற்ற தோழனாய்க் கைகொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், 'எற்கின் ஸ்பென்ஸ் ஓவசீஸ் ரவல் சேவிசஸ்' நிறுவனத்தினரின் சேவைகள் குறித்தும் கருத்தரங்கில் கூறப்பட்டது.

அவற்றில்,

● குடும்பத்துடனோ, குழுக்களாகவோ வெளிநாடுகளில் உள்ள இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் திருத்தலங்களுக்கும் மற்றும் உல்லாச தலங்களுக்கும் விடுமுறையைக் கழிக்கச் சென்றுவர வசதிகள் -

● இந்தியாவுக்குத் திருத்தல யாத்திரைக்குச் செல்லும் யாத்திரிகளுக்கு சைவஉணவு மற்றும் நேர்த்திக்கடன் செய்வதற்கான சகல வசதிகள் -

● யாழ்ப்பாணத்திற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் விமானப் பயணச்சீட்டை உறுதிசெய்தல் (Re Confirmation), பயணத்திற்கான திகதியை மாற்றுதல் (Date Change) போன்ற சேவைகள் -

● வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கு யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் எப்பாகத்திலும் விடுதி வசதிகள் -

● உலகின் சகல பாகங்களுக்குமான குறிப்பாக கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மன், மலேசியா, சிங்கப்பூர், பாங்கொங், மும்பாய், சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் மற்றும் ஏனைய நகரங்களுக்கான விமானப் பயணச் சீட்டு வசதிகள் -

● உலகளாவிய விடுதி, தங்குமிட வசதிகள் -

● ஐரோப்பிய நாடுகளுக்கான புகையிரத வசதிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். ☆



யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் 'எற்கின் ஸ்பென்ஸ்' நிறுவனத்தினர் நடத்திய கருத்தரங்கில் யாழ்.கிளை முகாமையாளர் ரவி கந்தசாமி உரையாற்றுவதையும், அருகில் உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரீ.இராஜரட்ணம், ரீ.என்.ரீ. அலுவலர் ஆ.டென்ஸ் ராஜ்குமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# அடுத்தமாத முற்பகுதியில் யாழ்.வர்த்தகக் கண்காட்சி

நாட்டில் சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டில் பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒரு மைல்கல்லாக அமைகிறது யாழ். வர்த்தகக் கண்காட்சி.

எதிர்வரு... ஓகஸ்ட் மாதம் 3, 4, 5ஆம் தி... ...ல் ...ழ்.மத்திய கல்லூரியில் இ... கண்காட்சி இடம் பெறவுள்ளது.

வெறும் வர்த்தகக் கண்காட்சியாக மட்டுமன்றிப் பொழுதுபோக்கு அம்சங்களையும் உ... ...ழ். வர்த்தகக் கண்காட... ...ரு விருப்பதால், குடாநாட்டில ...த்தகர்கள் உட்பட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மறக்கமுடியாத ஒரு அனுபவமாகவே யாழ்.வர்த்தகக் கண்காட்சி அமைந்திடப்போகிறது.

யாழ்.வர்த்தகப் பொருள்காட்சியானது பல வருடங்களுக்குப் பின்னர் தென்பகுதியில் வாழும் வணிக சமூகத்தினர் வடபகுதியிலுள்ள ஆற்றல்மிக்க தொழிற்றுறை உரிமையாளர்களைச் சந்திக்க ஒரு முழுமையான வாய்ப்பினை வழங்கவுள்ளது. இந்தப் பொருள்காட்சியானது, வர்த்தகத் தொடர்புகளை மீளமைப்பதற்கும், எதிர்கால விற்பனை வாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் ஒரு நுழைவாயிலாக அமையும்.

யாழ்.வர்த்தகப் பொருள்காட்சியானது மீண்டும் ஐக்கியப்படுவதற்கு உந்துசக்தியாக விளங்குவதுடன், நாட்டின் வடக்கு மற்றும் தென்பகுதிகளிலுள்ள வர்த்தகர்களை அழைத்து

**Jaffna Trade fair**

வலுவான வர்த்தகத் தொடர்புகளின் முன்னேற்றங்கள் மூலமாக சிறிலங்காவில் நிரந்தர சமாதானம் உருவாக வழியமைக்கும்.

ஆர்வமுள்ள தரப்பினர் தங்கள் உற்பத்திகளையும் சேவைகளையும் காட்சிக்கு வைத்து, வடபகுதியிலுள்ள ஆற்றல்மிக்க வர்த்தக முதலீட்டாளர்களைச் சந்தித்து - வர்த்தகத் தொடர்புகளை உருவாக்கி - எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் குறித்துக் கலந்துரையாடுவதே யாழ. வர்த்தகப் பொருள்காட்சியின் முக்கிய குறிக்கோளாகும். கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பல முன்னணி வர்த்தக சம்மேளனங்களிடமிருந்து ஏற்பாட்டாளர்கள் சேவைகளைப் பெற்று பொருள்காட்சிப் பொருள்களை வைப்பதற்குப் பொருத்தமான வர்த்தகப் பங்காளிகளை ஒழுங்குசெய்வர்.

பொருள்காட்சியின்போது -

தொடர்புடைய அமைச்சுக்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் உதவியுடன் விசேட கருத்தரங்குகள் நடத்தப்படும். கிடைத்துள்ள மூலதன வாய்ப்புகள் குறித்து இக்கருத்தரங்குகளில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படும். நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வடக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களை முன்னேற்றுவது தொடர்பாகவும் இந்தக் கருத்தரங்குகளில் கலந்துரையாடப்படும். விவசாயம், கால்நடை அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், உணவுப் பொருள்களைப் பதனிடுதல் மற்றும் தகரங்களில் அடைத்தல், கொழும்பு சரக்குச் சந்தை தொடர்பான முதலீட்டு அறிவுரைகள் ஆகியவற்றுக்கு இந்தக் கருத்தரங்குகளில் முக்கிய இடமளிக்கப்பட உள்ளது. ☆

# மகளிர் முன்னேற்ற அலுவலர்க்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம்,ஜூலை18

மகளிர் விவகார அமைச்சின் மகளிர் முன்னேற்ற பெண் உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.குடாநாட்டிலிருந்து 262 பட்டதாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. அழைக்கப்பட்ட 262 பேரில் 131 பேருக்கு எதிர்வரும் 26ஆம் திகதியும் மிகுதி 131 பேருககு எதிர்வரும் 27ஆம் திகதியும் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ளோர் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், பட்டதாரிச் சான்றிதழ், வசிப்பிடத்தை உறுப்படுத்தும் கடிதம் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் வருகைதருமாறு யாழ. அரச அதிபர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 131 பேரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

கருணா பாலசிங்கம் (உடுவில்), மயில்வாகனம் தங்கமலர் (ஆனைக்கோட்டை), வாசுகி திருநாவுக்கரசு (அரியாலை), விமலரஜனி கந்தசாமி (திருநெல்வேலி), ஆனந்தகுமாரன் சிவரஜினி (மீசாலை), சுபாஜினி செல்வராஜா (ஆனைக்கோட்டை), சிவரூபா மகாலிங்கம் (யாழ்ப்பாணம்), பேரம்பலம் புனிதா (மூளாய்), நீலலோஜினி அம்பலவாணர் (மண்டைதீவு), கந்தசாமி சிவச்செல்வி (இடைக்காடு), செந்தமிழ்ச்செல்வி தம்பையா (திருநெல்வேலி), கிருஷாந்தி சிவகுமாரன் (இணுவில்), ரஞ்சனா நவரட்ணம் (திருநெல்வேலி), பவானி மாசிலாமணி (சுண்டுக்குளி), அனுஷா பரமானந்தம் (திருநெல்வேலி), ஜசந்தா மயில்வாகனம் (அச்செழு) -

சசிகலா சண்முகநாதன் (கல்வியங்காடு), மீராதேவி சின்னையா (அச்சுவேலி), தம்பிப்பிள்ளை மூதினி (உரும்பிராய்), தயாளினி நவநீத கிருஸ்ணன (கொக்குவில்), செல்வரட்ணம் ராஜராணி (நல்லூர்), சுஜந்தா செல்லத்துரை (சுதுமலை), சத்தியபாமா கணபதிப்பிள்ளை (தெல்லிப்பழை), சுப்பையா சயாரபி (வயாவிளான்), சுஜிதா குகதாசன் (கொக்குவில்), வனஜா கணேசுவாமி (யாழ்ப்பாணம்), ரஜினி இராஜநாயகம் (வட்டுக்கோட்டை), தமிழரசி இலகுநாதன் (இணுவில்), ஸ்ரீவதனி ஸ்ரீஸ்கந்தராஜா (துன்னாலை), ஜெயந்தராணி உலகேஸ்வரன் (கோண்டாவில்), ஸ்ரீ தங்கராஜா சுதா (நல்லூர்) -

தர்சினி கனகலிங்கம் (நல்லூர்), சிவானந்தம் தயாவாணி (சுன்னாகம்), உமாதேவி தியாகராஜா (வடலியடைப்பு), பொன்னுத்துரை பிரியதர்சினி (நயினாதீவு), சண்முகநாதன் நாகேஸ்வரி (நயினாதீவு), அற்புதலிங்கம் ரஜனி (துன்னாலை), விஜிதா தம்பிப்பிள்ளை (நல்லூர்), சுபானுதா பாலசிங்கம் (ஆனைக்கோட்டை), சிவாஜினி சிவலிங்கம் (கொக்குவில்), அருந்ததி செல்வராசா (அச்செழு), தாரிணி தியாகராசா (இணுவில்), தயாளசௌந்தரி நாகமணி (நயினாதீவு), சுபாசினி வையநாதன் (திருநெல்வேலி), யசோதரா நடராசா (கோண்டாவில்), வசந்தி பரராஜசிங்கம் (உரும்பிராய்), சியாமினி பரமசிவம் (கொடிகாமம்), தேவஜி செல்லத்துரை (இயற்றாலை) -

சுதாஜினி பரம்சோதி (நாகர்கோயில்), பகீரதி குமாரவேலு (பருத்தித்துறை), சசிகலா நாகலிங்கம் (கோப்பாய்), குமாரவேலு சியாமளாதேவி (பருத்தித்துறை), மஞ்சுளா தாமோதரம் (அல்வாய்), சுராதினி மார்க்கண்டு (அளவெட்டி), கௌசியா சண்முகநாதன் (துன்னாலை), மிதிலா நாகேந்திரன் (கைதடி), ஜெனற் கிறிஸ்தோபர் (யாழ்ப்பாணம்), கஜழினி தெய்வநாயகம் (அளவெட்டி), ஜெயவாணி நடேசு (அளவெட்டி), உஷாந்தினி சிவநாதன் (கொழும்பு), வினோதரன் யசோதா (சங்கானை), செல்வரஜினி செல்லத்துரை (இமையாணன்), உகந்தினி செல்லத்துரை (இமையாணன்), கேசகுமாரி சிவக்கொழுந்து (உடுப்பிட்டி), சிவதர்சினி தியாகராஜா (யாழ்ப்பாணம்), சுகந்தினி குமாரசாமி (சாவகச்சேரி)-

லதா மங்களேஸ் சோமாஸ்கந்த சர்மா (திருகோணமலை), பிறேமலதா சண்முகம் (மீசாலை), ரோகிணி தியாகராசா (நவிண்டில்), யாழினி கந்தசாமி (எழுதுமட்டுவாழ்), அபனா செல்லத்துரை (கோப்பாய்), அன்பரசி சீவ...ணம் (அல்வாய்), தூமினி தர்மலிங்கம் (சரசாலை), வதனா சின்னையா (சரசாலை), மார்க்கண்டு பாஸ்கரன் (கரவெட்டி), கலைரஞ்சினி சிவானந்தன் (யாழ்ப்பாணம்), தர்மினி தர்மலிங்கம் (கொழும்பு), சுஜந்தினி கனகு (கொ...டடி), இந்துமதி நிருபன் (தாவடி), ஜீவானந்தி வீரசிங்கம் (மிருசுவில்), மாணிக்கம் சிவகலாராணி (மயிலி...), வசந்தமாலா வல்லிபுரம் (திருநெல்வேலி) -

சசிகலா பத்மநாதன் (யாழ்ப்பாணம்), விமலரஞ்சினி மயில்வாகனம (இயற்றாலை), கமலினி கந்தசாமி (சாவகச்சேரி), விஜயலதா ஐயம்பிள்ளை (சுன்னாகம்), நிலானி பாலசிங்கம் (சங்கானை), கோமளாவதி சிவகுருநாதன் (கைதடி), ரஜீதா சின்னத்துரை (நுணாவில்), சுகல்யா நடராஜா (சரசாலை), சுபாஞ்சனி திருப்பதி (வல்வெட்டித்துறை), சத்தியவாணி மகாலிங்கம் (சுன்னாகம்), ஆனந்தரூபி குணரட்ணம் (ஓட்டுமடம்), ரகுமார் ஜெயசுதா (கோப்பாய்), தயானந்தினி துமகுலசிங்கம் (நல்லூர்), புனிதசீலி தர்மசகாயம்பிள்ளை (மண்டைதீவு), மதிவதனி ஸ்ரீதவன் (கொக்குவில்),

(10ஆம் பக்கம் பார்க்க)


# வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டம் நாளை ஸ்கந்தாவில் ஆரம்பம்

வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டப் போர்(Battle of the Heroes) என்று வர்ணிக்கப்படும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி நாளையும் நாளைமறுதினமும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கும் ஆட்டம் ஆரம்பமாகும்.

புத்தாயிரமாம் ஆண்டான கடந்த ஆண்டே இப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை நடைபெறுவது இரண்டாவது போட்டியாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.




ஸ்கந்தவரோதயக் கல்லூரி

இருப்பவர்கள் :(இடம் இருந்து வலமாக) எம்.நடராசா (விளையாட்டு செயலாளரும் விளையாட்டு ஆசிரியரும்), எ.துஷ்யந்தன் (பிரதித் தலைவர்), கே.சிவாஜி (அதிபர்), ரீ.இராஜ்குமார் (அணித் தலைவர்), ஆர்.ஜோர்ஜ் (பொறுப்பாசிரியர்), எம்.குமரரூபன் (பயிற்றுநர்).

நிற்பவர்கள் முதல் வரிசை:(இடமிருந்து வலமாக) எஸ்.சதீஸ், எம்.மங்களதாஸ், எஸ்.சுஜீவன், என்.கபிலன், எச்.கிருஷ்ணசந்திரா, எஸ்.சரூன், எஸ்.சுதர்சன், பி.தயான், எ.பிரதீப்.

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை :(இடமிருந்து வலமாக) ஜே.ஜெயகிருஷ்ணன், எஸ்.ஜெயராம், வி.ரஜீவன், எஸ்.யசீதரன், எஸ்.சுமன், பி.கஸ்டன், எஸ்.சுரேஸ்.



மகாஜனக் கல்லூரி

இருப்பவர்கள்:(இடமிருந்து வலமாக) கே.காராளசிங்கம்(விளையாட்டு ஆசிரியர்), கே.இராஜ குலேந்திரன்(உப-அதிபர்), எஸ்.இராஜகாந்தன்(அணித்தலைவர்), பி.சுந்தரலிங்கம் (அதிபர்), எம்.அன்பழகன்(பிரதித்தலைவர்), எஸ்.ஜெயதீபன்(பயிற்றுநர்), எஸ்.சயந்தன் (விளையாட்டு செயலாளரும் ஆசிரியரும்).

நிற்பவர்கள்:(முதல் வரிசை இடமிருந்து வலமாக), எஸ்.தேவகுமாரன் (பொறுப்பாசிரியர்), ஆர்.கார்த்திகேயன், கே.செல்வரூபன், எஸ்.ஆரூரன், என்.பிரபு, வி.துஷியந்தன், பீ.அச்சுதன், கே.மயில வாகனம்.

நிற்பவர்கள்:(இரண்டாவது வரிசை இடமிருந்து வலமாக) பி.ஜனார்த்தனன், ஆஸ்.ரவிசாந்த், கே.இராஜேஸ்வரன், பி.ரவிசங்கர், ரீ.ரஜீவ்.

## சிறைகளில் ஹெரோய்ன் விற்பனை காவலர்களுக்குத் தொடர்பாம்

சிறைச்சாலைகளில் ஹெரோய்ன் உட்பட போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் சிறைக் காவலர்கள் பற்றி உள்துறை அமைச்சுக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இவ்வாறான காவலர்களின் எண்ணிக்கை 30 ஆகும்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் சிறைக்காவலர்களைக் கைது செய்யப் போதைப்பொருள் ஒழிப்பு பொலீஸ் பிரிவு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

பாதாள உலகத்திலுள்ள போதைப் பொருள் விற்போரின் ஒத்துழைப்புடன் சிறைக்காவலர்கள் சிறைக்குள் தங்கள் தொழிலை நடத்தி வருகின்றார்கள் என்று அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெலிக்கடை, மெகசின், மஹர, நீர்கொழும்பு ஆகிய சிறைகளில் இந்தத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. வாரத்தில் இரு தடவைகள் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் சிறைகளுக்குள் இதன் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. (ஒ)

## மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

மாவட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமைமுதல் நடைபெறவுள்ளன.

ஐந்து வலயங்களுக்குமான இப்போட்டிகள் எதிர்வரும் 20ஆம், 27ஆம திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றிலும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம், 3ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெறவுள்ளன.(ஒ-8)



தீவகத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைகளை ஆரம்பிக்க சுதந்திர ஆணைக் குழுவின் அங்கத்தவர் சீ.வி.கே.சிவஞானம், செயலாளர் நாவலக்க கலுவெவ, தலைவர் எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக்க, அங்கத்தவர் ஓ.பி.வீரசங்க ஆகியோர் வந்தபோது எடுத்த படம். *(படம்:தேவராஜன்)*

## இராணுவத்தினருக்கு உணவு வழங்குவதில் மோசடி கப்டன் உட்பட 4பேர் கைது!

கொழும்பு,ஜூலை18

இராணுவ வீரர்களுக்கான உணவுப் பங்கீட்டுப் பணத்தில் லட்சக்கணக்கான ரூபாய்களை மோசடி செய்த இராணுவ கப்டன் ஒருவரும் மூன்று இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் வவுனியா 56ஆவது படையணியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இம் மோசடி இடம்பெற்று வந்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோசடி குறித்து இராணுவத்தின் ஒழுக்காற்று அதிபருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இராணுவப் பொலீஸாரால் விசாரணை நடத்தப்பட்டது. இவ்விசாரணையை அடுத்தே இவர்கள் கைதாகினர்.

இம்மோசடியில் வேறு பல உயர் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

## கடந்த இருவாரங்களில் மட்டும் விபத்துகளில் 52 பேர் காயம்!

### அவர்களில் இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

குடாநாட்டில் வீதிப்போக்குவரத்து விபத்துக்கள் அதிகரிப்பால் கடந்த இருவாரங்களில் மட்டும் இருவர் உயிரிழந்ததுடன் 52பேர் படுகாயம் அடைந்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பொலீஸ் நிலைய புள்ளிவிவரங்கள் மூலம் அறியவருகிறது.

மேலும் அந்தப் புள்ளிவிவரங்களின்படி, இவ்வாண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூலை 15ஆம் திகதிவரை வீதி விபத்துக்களில் சிக்கி 11பேர் உயிரிழந்துள்ளதாகவும் -

516பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளின் கவனக்குறைவே பெரும்பாலான வீதி விபத்துக்களுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

வீதிப்போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில் அவதானமாக வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதே வீதி விபத்துக்களைத் தவிர்க்க ஒரேவழியாகும் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ-180)

## பேராயருக்கு விழா


குருநாகல்,ஜூலை18

குருநாகல் பேராயராக அதி வணக்கத்திற்குரிய அன்ரனி லியோ போல் ரேமன்ட் திருநிலைப்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை அத்துகல்புர கத்தோலிக்க பூங்காவில் விழா ஒன்று இடம்பெறவுள்ளது. (ஒ)

## அதிபர் பதவி நிலைப்படுத்தல்

கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் அதிபராகப் பதவியுயர்வு பெற்ற தமபிராசா சாம்சன் லூர்த்தியை நாளை வெள்ளிக்கிழமை யாழ்.பரியோவான் ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு கொழும்பு ஆயர் அதிவண. டியூலிப்டி சிக்கேரா பதவி நிலைப்படுத்தவுள்ளார். (ஒ)

## சாயி சிந்தனை



மனிதனுள் மறைந்திருக்கும் தெய்வீகம் புலன்கள் வழியாகத்தான் உருவாகின்றது. புலனடக்கத்தின் மூலம் எதையும் சாதிக்கலாம். சொல்லப் போனால் நீயே தெய்வீகமாக மாறலாம். இவ்வளவு சக்தி படைத்த மனிதன் தன்னைப் பலமற்றவனாகவும், அறிவற்றவனாகவும் கருதுகின்றான். மனிதன் தன்னைவிடப் பெரியதான சக்தி வேறொன்று உள்ளது. அந்த சக்திதான் தன்னைக் காப்பாற்றுகின்றது; வழிநடத்துகிறது என நினைக்கிறான். உன்னைக் காட்டிலும் மிகச் சிறந்த சக்தி வேறெதுவும் இல்லை. இருப்பது ஒன்றே! ஒரே சக்தி! இரண்டல்ல! இரண்டாவது சக்தி இருக்கிறது எனத்தேடுவது அறியாமை! ஒன்றேயொன்றுதான் இருக்கின்றது இவ்வுலகில். இரண்டாவதே இல்லை. ஒன்றே பலவாகக் காட்சியளிக்கின்றது. தங்கள் ஆசை நிறைவேறியதும், தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக சிலர் நினைக்கிறார்கள். ஆசைகள் நிறைவேறுவதால் மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. அதற்குப்பதில் உங்கள் ஆசைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்தால் நீங்கள் உண்மையிலேயே ஆனந்தம் அடைவீர்கள். தன் ஆசைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மனிதனே உண்மையில் ஆனந்தமாக இருக்கிறான். ஆசைகள் நிறைவேறிவிட்டால் பிறகு நீங்கள் அமைதியடைய மாட்டீர்கள்.

இவை என்ன ஆசைகள்? எல்லாம் இவ்வுலகியலானவை மட்டும் தானே. இந்த வெளிப்புற உலகில் எவ்விதமான மகிழ்ச்சியும் சிறிதளவு கூடக் கிடையாது. உலகில் மகிழ்ச்சி இருப்பதாக எண்ணிக்கொண்டு உட்புறப் பாதையை விட்டுவிலகி நிற்கிறீர்கள். அன்பே பிரதானமான வாழ்க்கைத் தத்துவம். அந்த உயர்ந்த அன்பை அனுபவிப்பதற்கு உங்களது புலன்களை முதலில் முழுமையாக அடக்க வேண்டும். ஆகவே முதலில் நீ நல்லதையே பார்!

கெட்டதைக் காணாதே! நல்லதையே பேசு! கெட்டதைப் பேசாதே!

*ஆதாரம் சனாதன சாரதி.*

# பதிவேடுகள் வைக்க உத்தரவு

தென்மராட்சி,ஜுலை18

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் மக்களின் முறைப்பாடுகளை ஏற்கும் பதிவேடுகளை வைக்குமாறு யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே அங்குள்ள முறைப்பாட்டுப் பெட்டிகளுடன் முறைப்பாட்டுப் பதிவேடுகளையும் பேணுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. இராசையா தெய்வேந்திரம்பிள்ளை

அவர்கள்

**(யாழ். பல்கலைக்கழக நூலக கவனிப்பாளர்)**

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் யாழ். பல்கலைக்கழகத்தில் நூலகக் கவனிப்பாளராக (விசேட தரம்) பதவி வகிப்பவரும் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய இயக்குநர்சபை உறுப்பினராகவும் எழுதுமட்டுவாள் தெற்கு, வடக்கு கரம்பகம் மக்கள் நலன் காக்கும் கழகத்தின் செயலாளராகவும் எமது சம்மேளன செயலாளராகவும் கடமையாற்றிவருகிறார். இவர் எழுதுமட்டுவாள் சிறிகணேச வித்தியாலயம், சீ.சீ.ரி.எம். பாடசாலை, இளைஞர் முற்போக்கு ஒன்றியம், ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம், சிறீ கணேசா சனசமூக நிலையம், பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம், பெரியகேணிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை போன்றவற்றின் முன்னாள் செயலாளரும் ஆவார்.

இவரின் சேவையும் பொதுப்பணியும் மேன்மேலும் சிறப்புற வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

எழுதுமட்டுவாள் தெற்கு விவசாய
சம்மேளன நிர்வாக சபை
உறுப்பினர்களும் அங்கத்தவர்களும்.

(C/22978)

## வீடு வாடகைக்குத் தேவை

கொழும்பினைத் தலைமையகமாகக் கொண்டதும் சர்வதேசத் தொடர்புடையதுமான பிரபல கணக்காய்வு நிறுவனத்தின் கிளை அலுவலகத்தினை நிறுவுவதற்கு யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து 1km சுற்றுவட்டத்திற்குள் உள்ள, 1000சதுர அடி விஸ்தீரணமுள்ள, நல்ல நிலையில் உள்ள வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

விளம்பர இலக்கம் 1571.

மே.பா.உதயன், யாழ்ப்பாணம். (C/22977)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 - 10 - 1953 | 18 - 07 - 2000 |



### அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்வி வலயம்;
உதவி மாவட்ட சாரண ஆணையாளர் - காங்கேசன்துறை;
(முன்னாள் ஆசிரியர், மகாஜனக் கல்லூரி)

*அன்பான குல விளக்கே!*
*எம்மைத் தனியே*
*தவிக்க விட்டுச் செல்ல*
*எப்படி மனம் வந்தது?*
*ஈராண்டுகள் சென்றாலும்*
*உங்கள் நினைவும் அன்பும்*
*எம்மைவிட்டு அகலவே அகலாது!*

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

*"தரன் இல்லம்"*
*தேவாலய வீதி,*
*மூளாய், சுழிபுரம்.* (6119)

தங்கள் நினைவோடு வாழும்:
மனைவி, முத்தரன்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுலை18

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில் அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறுகிறது.

எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழா நாள்களில் தினமும் மதியம் 12 மணிக்கு தெய்வீகச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. (ஒ-15)

★ ★ ★

சண்டிலிப்பாய் வேற்பதி ஸ்ரீ ஹரி ஹரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 22 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.(ஒ-135)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் காலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இம்மாதம் 24ஆம் திகதி புதன் கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் தொடர்ந்து மறுநாள் 25ம் திகதி காலை திருநாள் திருப்பலியும் தொடர்ந்து அன்று காலை திருச்சொரூப தேர்ப் பவனியும் புனிதரின் திருச்சொரூப ஆசீரும் நடைபெறும். (ஒ-51)

★ ★ ★

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 24ஆம் திகதியன்று நற்கருணை திருவிழாவும், 25ஆம் திகதி காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் நடைபெறவுள்ளது. (ஒ-135)

# கூட்டுறவு நிறுவன குழு வருகை

யாழ்ப்பாணம்,ஜுலை18

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது.

இக்குழுவினர் நேற்றுப்பகல் 11 மணியளவில் யாழ்.செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ்.மாவட்டத்தில் மீண்டும் நிறுவனத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இக்குழுவில் நிறுவனத்தின் பிரதிநிதிகளான மௌலானா, தெஹரகொட மற்றும் ரி.டி.எஸ்.ஏ.திஸநாயக்கா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.(ஒ-10)

# பதவி நீக்குமாறு கோரிக்கை

கொழும்பு,ஜுலை18

அரசாங்க நிறுவனங்கள் சீர்திருத்த ஆணைக்குழுவின் (பேர்க்) தலைவரான பி.பீ.ஜயசுந்தரவை உடனடியாகப் பதவி நீக்கம் செய்யும்படி 12 அமைச்சர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் நடைபெறும் கூட்டத்தில் இக்கோரிக்கையை ஒரு பிரேரணையாகச் சமர்ப்பிக்க இந்த அமைச்சர்கள் திட்டமிட்டிருக்கின்றனர்.

முன்னைய ஆட்சியில் நிதியமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய பி.பி.ஜயசுந்தர வாகனங்கள் கொள்வனவு ரப்பர் ஆராய்ச்சி நிறுவன கட்டட ஒப்பந்தம் ஆகியவற்றிற்குப் பொறுப்புடையவர் என்பது இந்த அமைச்சர்களின் கருத்தாகும்.

இந்த நிலையில் அவர் இன்றைய ஆட்சியில் உயர்பதவியொன்றை எவ்வாறு வகிக்க முடியும் என்பது அவர்களின் கேள்வியாகும். (ஒ)

# கோப்பாய் கோட்ட ஆங்கில தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜுலை18

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கான ஆங்கிலதின வாய்மூலப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில், யாழ்.கோட்ட பாடசாலைகளுக்கான ஆங்கிலதின வாய்மூலப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை புனித மரியாள் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாகக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-8)


## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிராமிய வங்கி அறிவித்தல்

**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தங்கள் வங்கி வைப்புப் புத்தகத்துடன் வந்து மீதியை உறுதிசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

பொதுமுகாமையாளர்,
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். (6116)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செந்திரு லிங்கரட்னம்

ரங்கூன், பர்மாவைப் பிறப்பிடமாகவும் முன்னர் வல்வெட்டித்துறையையும், பின்னர் கொழும்பையும், தற்போது கனடாவையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செந்திரு லிங்கரட்னம் அவர்கள் 13.07.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லிங்கரட்னத்தின் அன்பு மனைவியும் ரோஹான் (லண்டன்), ரமேஷ் (கனடா), கயல்விழி (கனடா), பூங்குழலி (அமெரிக்கா), தேன்மொழி (கனடா), கணேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலைச்செல்வி, நிர்மலா, பாலரஞ்சன், சுரேஷ்குமரன், டாக்டர் விஜயரஞ்சன், கலையரசி ஆகியோரின் மாமியாரும் வினோதன், ராஹுல், பிரவீன், அக்ஸயா, பிரகதீஷ், பிரஹம்யா, சதீஸ்குமரன், சப்ரினா செந்திரு குறிஞ்சிக்குமரன் ஆகியோரின் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2002.07.16 செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை நண்பர்களும், உறவினர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி:-*
***001 416 297 4338***
*தொலைமடல்:-*
***001 416 221 4445***

தகவல்:
எம்.கந்தசாமி (நம்பி - சகோதரர்)
பணிப்பாளர்/உரிமையாளர்,
ஒக்சோனியா நிறுவனம், கொழும்பு -06.

(C/22974)

## விஸ்வநாதன் விஜயகரன் (விஜியன்)

கொல்லங்கலட்டி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதன் விஜயகரன் (விஜியன்) அவர்கள் 07.07.2002 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதன் மற்றும் விமலாம்பிகை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் விஜயேந்திரன் (விஜி - பிரான்ஸ்), விஜயகுமார் (ராசா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசிரியர்), சிவபுண்ணியம், பாலசிங்கம், திருநாவுக்கரசு (நடேசு), கமலாம்பிகை (ஆசிரியர்) மற்றும் அமிர்தாம்பிகை ஆகியோரின் பெறாமகனும் விஸ்வநாதர், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் நவரத்தினம் (அச்சா), காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் கணேசலிங்கம் (லிங்கம்), யோகராணி, தங்கம்மா ஆகியோரின் அன்புக்குரிய மருமகனும் கோப்பெருந்தேவி, திருமுருகா (கனடா), குகதேவன், சாந்தமலர் (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் இளமுருகன், தயானந்தன் (கண்ணன்), காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் சண்முகதாசன் (பிறிமா ஆலை), விக்கினேஸ்வரன் (கனடா), அநிதா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கயல்விழி, கயல் அன்பன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றக்ஷனா (கனடா), றக்ஷிக்கா (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் இறைபதம் எய்திய வினாசித்தம்பி, கதிராசிப்பிள்ளை, சின்னத்துரை, நாகரத்தினம்மா ஆகியோரின் பிரியமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் பாடசாலை வீதி, கோண்டாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*த.முகவரி:*
*பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (6110)

தகவல்:
வி.விமலாம்பிகை (தாய்),
சி.கணேசலிங்கம்
(லிங்கம் - மாமா).

## கார்த்திகேசு பகீரதன்

**(பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு)**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பகீரதன் அவர்கள் நேற்று (17.07.2002) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற பத்மினி (பொறியியலாளர்) அவர்களின் அன்புக் கணவரும் மதுராவின் அன்புத் தந்தையாரும் நவரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ரவீந்திரன் (கனடா), சுபேந்திரன் (ஆஸ்திரேலியா), பிரகலாதன் (லண்டன்) ஆகியோரின் மூத்த சகோதரனும் சுபைதா (கனடா), பிரமிலா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் வைஷகி, பிரியதர்சன் ஆகியோரின் பெரியதந்தையும் நாகேஸ்வரியின் பெறாமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணல்தறை லேன்,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (6120)

தகவல்:
திருமதி இ.பூபாலசுந்தரம்

## இராயப்பு கீதபொன்கலன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு கீதபொன்கலன் நேற்று (17.07.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு - மதலேனம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - மேரி தம்பதியினரின் அன்பு மருமகனும் ரீற்றா திரேசம்மா (மலர்) அவர்களின் அன்புக் கணவரும் கலிஸ்ரா (லண்டன்), டிலிப்குமார் (சுவிஸ்), மேரி சுனித்தா, றவிக்குமார், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் ஆனந்தக்குமார் (சுவிஸ), விஜயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரான்சீஸ் (லண்டன்), றஞ்சினி (சுவிஸ்), யோண்சன் (புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்), றஜித்தா (சுவிஸ்), சுபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனிற்றா, றியாஸ்டின், றிமோஸ்டின் (லண்டன்), ஆரோன், சீமோன் (சுவிஸ்), அனுஷாந், அனுவித்தா (சுவிஸ்), சாருகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற றீற்றம்மா மற்றும் மாகிறேற், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் யோசேப்பு, எலிசபேத் (கனடா), அல்பிறேற், பத்திநாதர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/1, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (6121)

தகவல்:
திருமதி கீ.திரேசம்மா (மனைவி)

## சாரணர் பயிற்சிப்பாசறை

யாழ்.மத்திய கல்லூரி முதலாவது சாரணர் குழுவின் வருடாந்தப் பயிற்சிப்பாசறை, தென்மராட்சியில் உள்ள, யாழ். வரணி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

பலவருடங்களின் பின் கல்லூரிககு வெளியில் இப்பாசறையை இந்த வருடம் நடத்துவதற்கு ஒழுங்கு செயயப்பட்டுள்ளதாக குழுச் சாரண ஆசிரியர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சாரணர்களுக்கான களப்பயிற்சிகள், முதலுதவி வகுப்புக்கள், தீப்பாசறை நிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

## பரிசளிப்புவிழா

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

வணக்கத்திற்குரிய பிதா செல்லையா நேசகுமார் தலைமையில் நடைபெறும் விழாவில் அதிவணக்கத்திற்குரிய பேராயர் டுலிப் டி சிக்கோரா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ம-11)

# மின்சாரம் தாக்கி இணுவிலில் ஒருவர் பலி

## பூப்பறித்த சமயத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

மரத்தில் பூப்பறித்த நபர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமான சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இணுவில் மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இணுவில் மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசா (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார்.

இறந்தவர் தனது வீட்டின் அருகில் உள்ள வீட்டில் பூப்பறிக்கச் சென்றார் என்றும் -

அந்தப் பகுதியில் இருந்த நீரிறைக்கும் மோட்டார் ஒன்றின் வயர் அறுந்து அந்த மரத்துடன் இணைந்திருந்ததால் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்ததாகவும் -

அதில் சிக்கி அவர் மரணமானார் என்றும் - விசாரணைகளில் தெரியவந்தது.

இந்த மரணம் குறித்து மல்லாகம் நீதிவான் பா.சுப்பிரமணியம் விசாரணைகளை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (ம-3)

## வெங்காயம் விலை அதிகரிப்பு

அச்சுவேலி,ஜூலை18

யாழ். குடாநாட்டில் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. சாத்தாரண அளவு பருமன் உடைய வெங்காயம் கிலோ 50 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. (ம-11)

## பெறுபேறுகள்

கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவால் அண்மையில் நடத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பமானி பாடநெறிக்கான தெரிவுப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஐ.ஐ.எஸ் நிறுவனம்மூலம் இந்தப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றோரின் விவரத்தை அந்த நிறுவன அலுவலகத்தில் பார்வையிடலாம்.

அந்த நிறுவனத்தில் இருந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய 105 பேரில் 72 பேர் சித்தியடைந்துள்ளதாக நிறுவனம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மகளிர் முன்னே....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தர்சினி தர்மகுலசிங்கம் (நல்லூர்), சதாசிவம் சுதாஜினி (இணுவில்) -

சதாசிவம் செல்[illegible]ராணி (இணுவில்). [illegible]மோகனமாலா அம்பிகைபாலன் (ஆனைக்கோட்டை), சுப்பிரமணியம் ஜயந்தி (வண்ணார்பண்ணை), அனுஷா ஜெரகின் வென்சலோஸ் (பாஷையூர்), சுபாஜினி கந்தையா (மாவிட்டபுரம்), தர்மினி குமாரசாமி (புத்தூர்), சுகந்தி தனபாலசிங்கம் (திருநெல்வேலி), சிவாந்தினி செல்வராஜா (இணுவில்), நவரட்ணம் பாமதி (உடுவில்), மரியா யுடெக்சியா பிறிட்ஜெட் சவரிமுத்து (ஆனைக்கோட்டை), சிவாஜினி சிவராஜா (இளவாலை), கிறிஸ்டோ ஜெசில்டா றுமேசினி மரியநாயகம் (யாழ்ப்பாணம்), ராதை சின்னையா (கொழும்பு), வத்சலா சண்முகரட்ணம் (யாழ்ப்பாணம்), றெகிதா நாகராஜா (சண்டிலிப்பாய்), கயல்விழி வைரவப்பிள்ளை (நீர்வேலி), கலைதினி பஞ்சலிங்கம் (கரந்தன்), வசந்தராணி அருணகிரி (தாவடி) -

செல்வரட்ணம் தயாநிதி (கோப்பாய்), இரத்தினேஸ்வரி இராஜேந்திரா (பன்னாலை), சுபதா சிவலிங்கம் (கோண்டாவில்), சுதர்சிகா சிவரட்ணம் (யாழ்ப்பாணம்), கங்காதரன் சுவர்ணலதா (கரவெட்டி), அன்பரசி சிவசுப்பிரமணியம் (கந்தர்மடம்), சசிகலா சண்முகம் (வரணி), பகவதி விநாயகமூர்த்தி (கரணவாய்), சுதா வேலாயுதம் (கரணவாய்), பாக்கியநாதன் டொரின் (யாழ்ப்பாணம்), சுகந்தி தனபாலசிங்கம் (வல்வெட்டித்துறை), சுபாஜினி தில்லைநாதன் (சுன்னாகம்), சுதாகினி (அல்லாரை), ஜானகி நடேசு (கரணவாய்).

மிகுதி 131 பேரின் பெயர் விவரங்கள் நாளைய உதயனில் வெளியாகும். (ஒ-10)

# வைகோ கைதை கண்டித்து இன்று மட்டுநகரில் பேரணி

காத்தான்குடி,ஜூலை18

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டித்து மட்டக்களப்பில் இன்று காலை கண்டனப் பேரணி நடைபெறும்.

பேரணி மட்டக்களப்பு காந்தி சிலை முன்றலிலிருந்து ஆரம்பமாகி, திருமலை வீதி, பார்வீதி வழியாக அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் முடிவடையும்.

பேரணியின் முடிவில் பொதுக்கூட்டமும், உண்ணாவிரதமும் இடம்பெறவுள்ளன.இதற்கான ஒழுங்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்துள்ளது.

இந்த சாத்வீக எதிர்ப்புப் போராட்டங்களின் இறுதியில் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா, சார்க் கமைப்பு, ஐக்கியநாடுகள் சபை போன்றவற்றிற்கு மகஜர்களும் அனுபப்படவிருக்கின்றன. (ஓ)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக்சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரமும் ஆட்டங்கள் இடம்பெறும் இடங்களும் வருமாறு:-

*துரையப்பா ஸ்ரேடியம்*

★ மாலை 4 மணி - பல்கலைக்கழகம் எதிர் பொற்பதி.

★ மாலை 5.15 மணி - பாடும்மீன் எதிர் சென்.மைக்கல்.

*உரும்பிராய் இந்து*

★ மாலை 4 மணி - சென். நீக்கிலஸ் எதிர் றோயல்.

★ மாலை 5.15 மணி - சென். அன்ரனீஸ் எதிர் சென். றோக்ஸ். (ம-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெற்றுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4.30 மணி - ஜொலிஸ்ரார் வி.க. எதிர் பட்டபிளை வி.க.

★ மாலை 5.15 மணி - யுத்கார்மல் வி.க. எதிர் அரியாலை யூனியன் வி.க. (ம-3)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வீ இராசையா கலந்து கொள்ளவுள்ளார். (ம-86)

# சேதமடைந்த கட்டடப் பகுதி வீழ்ந்து 3 தொழிலாளர்கள் காயம்

## சாவகச்சேரி நகரப்பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,ஜூலை18

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையத்தின் கட்டட இடிபாடுகளைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது ஏற்கனவே சேதமடைந்த கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் மூன்று தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்றது.

கட்டட இடிபாட்டுக்குள் சிக்கிக் கொண்ட மூன்று தொழிலாளர்கள் அப்பகுதியில் நின்ற பொது மக்களாலும் படையினராலும் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கக்கூடிய வார்ட் வசதிகள் இல்லாததால் அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம-117)

# மரண அறிவித்தல்கள்

## சின்னக்குட்டி இரத்தினசிங்கம்

**(இளைப்பாறிய ஊழியர், மின்சாரசபை)**

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (17.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரசுப்பிள்ளையின் அன்புக் கணவரும் இரத்தினாம்பிகை காலஞ்சென்ற சரசிங்கம், செல்வநாயகி, தசநாயகி (சுவிற்ஸர்லாந்து), சிவதேவி, காலஞ்சென்ற கேசவராசா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நவரத்தினம், ஜெயஆனந்தராசா, உதயராசா (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி, கிருபானந்தன், துஷ்யந்தி, திவாகரன் (மகாஜனக் கல்லூரி), தேனுகா (யூனியன் கல்லூரி), ஜெயபிரியந்தன் (மகாஜனக் கல்லூரி), கயானீ (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மிதுனன் (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து.ஜெயஆனந்தராசா
(சிறி - மருமகன்)

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.* (6116)

## மாரிமுத்து குகதாசன்

**(ஓய்வுபெற்ற லிகிதர், புகையிரதத் திணைக்களம்)**

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மாரிமுத்து குகதாசன் அவர்கள் நேற்று (17.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் விசாலட்சி (Betty)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - கனகவல்லி தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினம் - லீலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவதாசனின் அருமைச் சகோதரரும் R.K.பிள்ளை (Bobby), கதிரவேலு (Gerald), அன்னபூரணி (Anna), அமரரான கனகசபாபதி (Papa) ஆகியோரின் மைத்துனரும் இந்திரமதி, யோகாம்பிகை ஆகியோரின் சகோதரரும் பிரபா, பிரியா, கார்த்திக், தயா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி விசாலாட்சி
(Betty - மனைவி)

*67,வைமன் வீதி,*
*நல்லூர்.* (6122)


கூடைப்பந்தாட்டப் போட்டி - 2002

11ஆவது வருடாந்த நிகழ்வாக
யாழ். ஹற்றன் நஷனல் வங்கியினால்
நடத்தப்படும் 2002ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி கழகங்கள்/பாடசாலைகளுக்கிடையே
இன்று
(18.07.2002) வியாழக்கிழமை முதல்
யாழ். இந்துக் கல்லூரி
ஆடுகளத்தில் ஆரம்பமாகும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தந்து போட்டிகளைக் கண்டுகளிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்று
*மாலை 4.00 மணிக்கு*
யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி (B)
*மாலை 5.00 மணிக்கு*
யாழ். மத்திய கல்லூரி (A) எதிர் யாழ். மத்திய கல்லூரி (C)

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
(C/22979)

ஆடிவேல் கதிர்காம சுற்றுலா

வரப்போகும் ஆடிவேல் விழா. கதிர்காம முருகன் தரிசனம் காண்பதற்கும் மற்றும் -
கொழும்பு, கண்டி, நுவரெலியா, நம்பொடை, கக்கல, திருகோணமலை, முனீஸ்வரம் ஆகிய இடங்களுக்கும் சுற்றுலாக்குழு ஜூலை 22ஆம் திகதி திங்கட்கிழமை புறப்படவுள்ளது.
பயணம் - சொகுசு பஸ் சேவை
தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்படும்.
பயணக்கட்டம் 3,250/= மட்டுமே!
இச்சுற்றுலாவில் பங்குகொள்ளவிரும்புவோர் கீழ்க்காணும் இடங்களில் உடன் பதிவுசெய்து கொள்ளவும்.
மேலதிக விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

கணேசன் கொமினிக்கேஷன், கொக்குவில் சந்தி, கொக்குவில். T.P. 021-2585
சுவாஸ் கொமினிக்கேஷன் தாவடிச்சந்தி, தாவடி. T.P. 021-3522
றத்னாஸ் புடைவை மாளிகை நவீன சந்தை, சுன்னாகம்.
மகாத்மா கொமினிக்கேஷன் ஏழாலை.
பிள்ளையார் கொமினிக்கேஷன் கே.கே.எஸ். வீதி, இணுவில். T.P. 021-3570
(6112)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கடாலி, விவேக் நடித்த
மனதைத் திருடிவிட்டாய்
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30
(C/22943)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C/22944)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலைய கணித ஆசான் திரு.செ.ஜெயகாந்தன் அவர்களின் சிறிய தந்தையார்

**விநாசித்தம்பி செல்லத்துரை செல்வராசா**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
எவறெஸ்ற் கல்வி நிலையம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (6013)

### போராட்டத்தின் எதிரொலி

# வேலணை - வங்களாவடி வீதி போக்குவரத்துக்குத் திறப்பு!

வேலணை,ஜூலை18

வேலணையில் மாணவர்கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட வீதி மறியல் போராட்டத்தின் எதிரொலியாக -

வேலணை - வங்களாவடி வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்கு நேற்றுத் திறக்கப்பட்டது.

அந்த வீதியில் உள்ள வேலணை மத்திய கல்லூரி மாணவர்களும், அதிபர்களும் எந்தவித சோதனையும் இன்றி அந்த வீதியால் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தற்காலிக ஏற்பாடாக இந்த வீதி போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளது என்றும் -

உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிரந்தரமாகத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

தீவக கட்டளை அதிகாரி றியல் அட்மிரல் வீரசேகர நேற்று கல்லூரியில் நடந்த கலந்துரையாடலில் தெரிவித்தார்.

(ம-3-8-16-167)

## யுத்தநிறுத்த உடன்பாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்கின்றது. இந்த இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்கும்விதத்தில் கடல் விவகாரப் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு காணும்வகையில் - புரிந்துணர்வு உடன்படிக்கையை மாற்றி அதில் திட்டவட்டமான சில ஏற்பாடுகளைச் செய்வதற்கும் -

கடல் போக்குவரத்து விடயத்தில் புலிகள் வெளிப்படுத்திவரும் உரிமை தொடர்பாக, இதுவரை தான காட்டிவந்த இறுக்கமான நிலைப்பாட்டைத் தளர்த்தவும் -

அரசு தற்போது தயார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

"புலிகளின் கடல் போக்குவரத்துக் குறித்து இறுதித் தீர்மானம் ஏதும் இன்னும் எடுக்கப்படாவிட்டாலும் புலிகளின் கோரிக்கைக்கு இணங்குவது தொடர்பாக அரசு ஓரளவு ஆர்வம் காட்டியுள்ளது" - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்கு தெரிவித்திருக்கிறார்.

"கடந்த சனிக்கிழமை (இரணைதீவுக் கடல்) சம்பவத்துக்குப் பின்னர் நாம் இந்த விடயத்தை எப்படி பரிசீலிக்கப் போகின்றோம் என்பது எனக்கு இப்போது தெரியாது. என்றாலும் விடுமுறையில் செல்லும் புலிகளின் கடல் போக்குவரத்து விடயத்தை சாதகமாக அணுக நாம் தயாராக இருக்கின்றோம்.

"தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் குறித்து புலிகள் பேசி வருகின்றார்கள். எனினும் எது குறித்துத் தீர்மானிப்பது என்றாலும் அதற்கு முன்னர் நோர்வே ஏற்பாட்டாளர்களுடன் பேசி முடிவெடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

"ஆயினும், இன்றைய நிலையில் கடல் நடவடிக்கைகள் முற்று முழுதாக கடற்படைக்கு மட்டுமே உரியது என்பதுதான் கண்காணிப்புக் குழுவினரதும் அரசினதும் நிலைப்பாடாகும். அதற்கு மேல் தேவைப்பாட்டால் நாங்கள் பேச்சு நடத்தலாம். அநேகமாக இந்த விவகாரத்தினால் புரிந்துணர்வு ஒப்பந்தம் மீள்பேச்சுக்கு உரியதாகுகின்றது" - என்றும் ஒஸ்டின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தங்களது கடல் கண்காணிப்புப் பணியை மீளாய்வு செய்ய வேண்டி ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


INFORMATION TECHNOLOGY PARK
272, Stanley Road, Jaffna, Sri Lanka
T-P: 021-3641 e-mail: itp@sltnet.lk

Practical Workshop on PC Hardware & Maintenance
1st W. Shop - Tue ,The -11-1 pm
2nd W. Shop - Sat ,Sun -11-1 pm

Online Training on Web Page Designing
Mon,Wed, Fri - 5-7 pm

Online Training on Internet Practical Workshop
1st Batch:-Mon,Wed - 12 to 2 pm
2nd Batch:-Sat, Sun - 12 to 2 pm

Workshop Training on Typesetting & Designing
Sat, Sun: - 3 to 5 pm

Duration 1Month
Course fee 1000/=
Admissions are limited.
Course commence on:24-07-2002
Inquiries: Office



திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்
கணக்கீடு
S.தவா
பங்குடமை முடிவுக் க/கு
சனி, ஞாயிறு, செவ்.. வியா. 6.15 a.m.
ஆரம்பம்: 20.07.2002 (சனி)
(6117)



ஈசன் கல்வி நிலையம்
(ஆரம்பமாகிவிட்டது)
GENERAL ENGLISH COURSE
☆ சகல மொழித்திறன்களைக் கொண்ட கற்கைநெறி.
☆ உயர்கல்வி கற்கும் மாணவர்க்குரியது.
☆ சனி, ஞாயிறு காலை வகுப்புகள். (6099)
ஆசிரியர்: தி.நி.பஞ்சாட்சரம்


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 4 நாளைய உதயனில் இடம்பெறும். (மேலதிக பிரதிகளைப் பெற விரும்புவோர் வினாத்தாள் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் உதயன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸிஸ் பேகிர், பிரிட்டன் நாட்டுப் பிரதித் தூதர் பீட்டர் ஹெக், சுவீடன் நாட்டுப் பிரதித் தூதர் அன்டன் எரிக்கன், நெதர்லாந்து நாட்டுப் பிரதித் தூதர் ஹெறிகன் லீக் ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் தூதர்களை வரவேற்றனர்.

கிளிநொச்சியில் உள்ள நடுவப் பணியகத்தில் இந்தப் பேச்சுகள் இடம்பெற்றன.

இரண்டரை மணிநேரம் இடம்பெற்ற இந்தப் பேச்சுகளின்போது தற்போதைய சமாதான முயற்சிகளின் நிலைவரம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசு தாமதம் காட்டி வருகின்றது என்றும் -

அரசின் போக்கு சமாதான முயற்சிகளில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் -

தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

சமாதான முயற்சிகளில் முழுமையான ஆர்வத்தைத் தாம் காட்டுவதாகவும் -

புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக அமுல் செய்து, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பொறுப்பு அரசின் பக்கமே உள்ளது என்றும் - அவர் மேலும் எடுத்துக் கூறினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு தாங்கள் பூரண ஆதரவைத் தெரிவித்து வருவதாகவும் -

தொடர்ந்தும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் -

ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் தெரிவித்தனர். (ம-3-12)


### தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த *சச்சிதானந்தம் சுகிபன* என்பவரின் லான்ட் மாஸடர் வாங்கியதற்கான பற்றுச்சீட்டும் (K 600A 39966, GA - 75 - 032195) பெயர் மாற்றுப் படிவமும் சாவகச்சேரி, கொடிகாமம் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிறி வெற்றிலைக்கடை, கொடிகாமம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6111)


# 66ஆயிரம் லீற்றர் பெற்றோல் நேற்றுத் தரைவழியாக வந்தது

சுமர் 12 வருட இடைவெளிக்குப் பின்னர் தரைவழியாக குடாநாட்டுக்கு பவுஸர்கள்மூலம் எரிபொருள் எடுத்து வரப்பட்டுள்ளது.

ஏ.எம்.ரி. நிறுவனத்தின் இரு பவுஸர்கள் மூலம் 66 ஆயிரம் லீற்றர் பெற்றோல் நேற்று எடுத்துவரப்பட்டது. அவை உடனடியாக எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டன.

பரீட்சார்த்தமாகவே நேற்றுப் பெற்றோல் எடுத்துவரப்பட்டுள்ளது என்றும் -

தொடர்ச்சியாக தரைவழியாகப் பெற்றோல் எடுத்துவரப்பட்டபின்னரே பெற்றோலுக்கான விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும் -

நடைமுறையில் உள்ளபடி லீற்றர் 74 ரூபா 50 சதப்படியே பெற்றோல் விற்பனை செய்யப்படும் என்றும் -

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-3-8-17-117)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீனவர்களை விடுதலை செய்த யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இவர்களைப் பொறுப்பேற்று இந்திய - இலங்கை எல்லையில் வைத்து இந்தியக் கடற்படை அதிகாரிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன்துறை கடற்படை அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இந்த மீனவர்கள் இன்று இந்திய கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றனர். (ம-3)

## காரைநகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் பறக்கவிடப்பட்டிருந்தன.

காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் வரவேற்புக் கூட்டம் இடம்பெற்றது.

காரைநகர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் ஆர்.சிற்றம்பலம் தலைமையில் நடந்த கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் அருந்தவம் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ம-3-73)

## தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சூசை அழைத்து வந்தார்.

பொது ஈகச்சுடரை தலைவர் பிரபாகரன் ஏற்றியதையடுத்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்தார்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த இரு மேடைகளில் சமகாலத்தில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கேணல் சூசை அங்கு சிறப்புரையாற்றினார். கடற்புலிகளின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் தொடர்பாக எடுத்துரைத்தார்.

தலைவர் பிரபாவின் வழிகாட்டலில் கடற்புலிகள் படையணி வளர்ச்சியடைந்து உன்னத நிலைக்கு உயர்ந்துள்ளது - என்று அவர் கூறினார்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ம-3-12)


வாழ்த்துக்கள்
கலாபூஷணம் விருது பெறும்
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளைக்கு
எங்கள் வாழ்த்துக்கள்
அராலி சரஸ்வதி நாடக மன்றம் (6094)



விற்பனைக்கு
வெள்ளை நிறமுடைய புதிய TOYOTA DYNA MOTOR LORRY (டீசல்) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- ச.செல்லையா,
உரும்பிராய் கிழக்கு (R.C. School Lane), உரும்பிராய். (6087)


## மரண அறிவித்தல்கள்

### மரியாம்பிள்ளை ஆறுமுகம்

பளை, வேம்பொடுகேணியைப் பிறப்பிடமாகவும் அரசர் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை ஆறுமுகம் நேற்று (17.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கிருஷ்ணபிள்ளை, திருமதி சி.கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லம்மா, முருகேசு (பிரதேச சபை, பளை), சுப்பிரமணியம், நடராஜா, இராசலட்சுமி, காலஞ்சென்ற சொக்கலிங்கம், வேல்முருகு, சிவராசா, தங்கவேலு (ஆசிரியர், கிளிநொச்சி வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகசபை, அன்னலட்சுமி, நாகேஸ்வரி, யோகாம்பிகை, காலஞ்சென்ற ராமு, இலங்காதேவி, பானுராணி, லலிதாராணி, சாரதா (ஆசிரியர், யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் அருகில், டச்சு வீதி, மீசாலை மேற்கு.*
நிரந்தர முகவரி:
*அரசர் கேணி, பளை.*

*தகவல்:*
ஆ.தங்கவேலு (மகன்)
(ஆசிரியர்,கிளிநொச்சி வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை)

(C/22986)

### செல்லப்பா திருச்சிற்றம்பலம் (மாதகல்)

(மாதகல் அரசடி சித்திவிநாயகர் கோயில் தர்மகர்த்தா)

அராலியைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபராகிய செல்லப்பா திருச்சிற்றம்பலம் அவர்கள் நேற்று (17.07.2002) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும் ஞானத்திருப்பூங்கோதையின் அன்புக் கணவரும் திருஞானச்செல்வனின் (புகையிரத என்ஜின் சாரதி, திருகோணமலை) அன்புத் தந்தையும் சந்திரிகாவின் (ஆசிரியர், இளவாலை சென்.கென்றீஸ் கல்லூரி) அன்பு மாமனும் நர்மதா, மயூரி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி, மாதகல்.*

*தகவல்:*
தி.திருஞானச்செல்வன் (மகன்)

(6123)


Bata Bata Bata Bata Bata Bata Bata Bata Bata Bata Bata Bata
Bata
கொழும்பு விலையில்
※ மொத்த வியாபாரிகளும்
※ மொத்தக் கொள்வனவாளர்களும்
※ ப.நோ.கூ.சங்கங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.
(விசேட மேலதிக கழிவுகளும் உண்டு)
பாட்டா மொத்த விற்பனை நிலையம்
253, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். T.P.No.: 3776
(C/22985)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.